முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

—வார இதழ்—

முரசு 4 | 22—11—57 வெள்ளி | ஒலி 31

ஏறிய ஏணியை....?

பெரியார்மீது சர்க்கார் தொடர்ந்துள்ள வழக்கு செஷன்ஸுக்கு கமிட் [illegible]யப்பட்டது [செய்

கற்பனை உரையாடல்

"வேண்டுதல் வேண்டாமை!"

காட்சி : 1

[திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகராஜ சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்]

சுந்தரர்: . . இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காத மாமா!

தியாகேசர் : என்ன பிரபோ!

சுந்: என்ன!...என்னையா தாங்கள் 'பிரபு' என அழைக்கிறீர்கள்?

தியா: ஆம் பிரபோ!...நான் அடியார்களின் அடிமை தானே!...தங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து நடக்கக் காத்திருக்கிறேன்.

சுந்த: அப்படியா, தியாகேசா... ஓர் அற்ப விஷயம் என் உள்ளத்தை ஒரேயடியாகக் குழப்பிக் கொண்டிருக்கிறது! ஒரே கவலை! அந்தக் கவலையில் பாலும் கசக்கிறது! பழமும் புளிக்கிறது...

தியா: தயக்கம் வேண்டாம் பிரபோ! தங்கள் மனதில் உள்ளதைத் தயங்காது கூறுங்கள்! தங்கள் கட்டளையைத் தலைமேல் தாங்கிச் சென்று இன்றே நிறைவேற்றுகிறேன்!

சுந்த: இந்த அற்பனின் அற்ப ஆசையையா ஆண்டவனாகிய தங்களிடம் கூறுவது?

தியா: நாங்கள் மட்டுமென்ன; உயர்ந்த ஆசைகளையா கொண்டுள்ளோம்?......எங்களாலேயே ஆசையை அறுக்க இயலவில்லையே! ... உண்மையைக் கூறப்போனால் எங்களுக்குத்தான் ஆசையும் பேராசையும் அதிகமிருக்கிறது! எங்கள் இனத்தவர் ஒவ்வொருவருக்கும் எத்தனை மனைவிகள்!...எத்தனை வேசிகள்!...

சுந்த: தாங்கள் பொதுவாகப் பேசுகிறீர்களா? ... அல்லது மற்றவர்களைப்பற்றி மட்டும் கூறுகிறீர்களா?

தியா: என்னைத்தான் எடுத்துக் கொள்ளேன்! பார்வதியைக் கல்யாணம் செய்து கொண்டார்லும் செய்து கொண்டேன்; பெரிய தொல்லையாகப் போய்விட்டது! அவள் என் உடலிலே ஒட்டிக் கொண்டு என்னை நகரவே விடமாட்டேனென்கிறாள்! என்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கும். இந்தக் கங்கையைப் பார்த்து சிறிது நேரம் இன்பமாகப் பேச அனுமதிக்கிறாளா?...என் ஆருயிர் காதலி — கங்கை என் தலையிலே உட்கார்ந்து கொண்டு விடும் கண்ணீர்த் துளிகள் யாவும்தான் சேர்ந்து உங்கள் நாட்டிலே ஆறாக ஓடுகிறதே!

சுந்த: கங்கையின் கண்ணீரைத் துடைக்க இயலாத தாங்களா என் கண்ணீரைத் துடைக்கப் போகிறீர்கள்?

தியா: அப்படியல்ல சுந்தரா! என் சொந்த விஷயத்தில் என் சக்திகள் யாவும் பயனற்றுப் போய்விடுகின்றன! பிறர் விஷயங்களில் என் சக்தி பயன்படும்! நீ தாராளமாக உன் ஆசைக் கூறு! நான் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால் ஆசையை மனதிலேயே வைத்துக் கொண்டு புழுங்கிச் சாவானேன்? ஒரு பொருளின்மீது ஆசைப் பட்டக்கூடாது; அப்படியே ஆசைப்பட்டுவிட்டால், அந்த ஆசையை நிறைவேற்றி அனுபவித்து விடவேண்டும்! இது தானப்பா எங்களின் கொள்கை!

சுந்த: அப்படியானால் கூறுகிறேன்...திருவாரூர் வடக்கு வீதியிலே...

தியா: சரிதான்! அவள்மீது உன் கண் விழுந்து விட்டதா?

சுந்த: அவளை உங்களுக்குத் தெரியுமா? அவள் சாதாரண அணங்குதானோ; அல்லது ஆய் மயிலா ஆண்டவனே? அவள் உதடு அமிழ்தத்தை விட இனிக்குமாமே!...ஆகா... அந்தக் கொடும் புருவம்... அதிலே அடங்கியிருக்கும் குறும்புப் பார்வை!...ஐயோ! ...என்னைக் கொல்லுகிறதே! ஆண்டவா! கங்கை—பார்வதி மணவாளா! அவள் கடைக் கண் அருள் உங்கள் திருவருளால்தான் கிடைக்க வேண்டும்!

தியா: கவலைப்படாதே!..நானே அவளிடம் செல்ல வேண்டுமென நினைத்தேன்!...உன் சாக்கிலேயாவது அவளைப் பார்க்க ஒரு வாய்ப்பு கிடைத்தது! இன்றே சென்று அவள் கோபத்தைத் தணித்து உன்னை அன்போடு உபசரிக்கச் செய்கிறேன்...மகிழ்ச்சி தானே!

காட்சி : 2

[திருவாரூர் வடக்கு வடம் போக்கித் தெரு. இந்தத் தெருவில் தியாகேசரைத் தூக்கிச் செல்லும் தேர் செல்வது வழக்கம். எப்பொழுதும் தியாகேசர் விக்ரகம் வடக்குவீதியிலே செல்லும்பொழுது, பரவை நாச்சியார் முன்பு குடியிருந்த வீட்டின் முன்னால் நின்று விட்டுத்தான் செல்லும்! நடு இரவு நேரம்; பரவை நாச்சியார் வீட்டின் கதவு தட்டப்படுகிறது. அதன் ஒலி கேட்டு, அவசர அவசரமாக அரை நிர்வாண நிலையிலே ஓடிவந்த பரவை, ஆண்டவனைக் கண்டு திடுக்கிடுகிறாள்!]

பரவை: வர வேண்டும்; வர வேண்டும்! தியாகேசா! உன் வரவால் என் வீடு புனிதமடைந்தது! நான் தன்யையானேன்!

தியா: பெண்ணே! உன்னைக் காண எவ்வளவு நாளாகத் திட்டம் தீட்டினேன்! இந்தப் பார்வதியும்,கங்கையும் இருக்கிறார்களே—அப்பப்பா!....... அவர்களை ஏமாற்றி விட்டு வருவதென்றால் சாமான்யமா என்ன...?

பரவை: .....அது சரி! இப்பொழுது தங்களின் வரவு யாருக்கும் தெரியாதே!...

தியா: ஒருவருக்கும் தெரியாது! ஓர் அடியாருக்கு மட்டும் தெரியும்!...நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே! கண்ணே! அருகில் வந்து பேசேன்!

பரவை: குறும்புக்கார கடவுளே!...உமக்குக் கொஞ்சம் கூட பொறுமை இருப்பதில்லை! அந்தப் படுக்கையில் அமருங்கள்! இதோ......ஒரு நொடியில் பாலும் பழமும் எடுத்து வருகிறேன்!

தியா:....வேண்டாமே!....ஆசையை முற்றிலும் துறந்த அடியேனுக்கு பால் எதற்கு? பழம்தான் எதற்கு?...பாவை நீ இருக்கும்பொழுது...அந்தப் பழம், பால் அருந்த நேரமேது?

[சிறிது நேரத்தில் அந்த வீடே சிரிப்பொலிகளால் நிரம்புகிறது!

காட்சி : 3

[பரவை வீட்டிலிருந்து வெளியே வரும் தியாகேசனை, 'ஏயர்கோன் கலிக்காமர்' என்ற அடியார் பார்த்து விடுகிறார்.]

— 'ஆனந்த விகடன்' (10—11—57)

கலிக்காமர்: ஐயனே! தியாகேசா!......இந்த இரவில்...... பரவை வீட்டுக்கா? ஆண்டவனே! மக்களுக்கு வழி காட்டியே! ஆசையை முற்றுந் துறந்த அடியார்களின் தலைவனே! பொறிவாயில் ஐந்தவித்தவனே! அறவாழி அந்தணனே! அடுக்குமா இது? 'வேண்டுதல் வேண்டாமை' இலாதவனென உன்னைப் புகழ்வதெல்லாம் பொய்தானோ?

தியா: சீ, அற்பனே! ஆண்டவனிடம் ஓர் அடியான் பேசும் விதமா இது? வாயை அடக்கிப் பேசு!

கலிக்: ஐயோ, எண் குணத்தின் இலக்கணமே! நீவிர் குறள் படித்ததுண்டா?

"பொருட் பெண்டிர் பொய்ம்மை
முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று!"

தியா: என்ன சொன்னாய்; துஷ்டா! நான் எதற்காக வந்தேன் தெரியுமா? சுந்தரரின் ஆசையை நிறைவேற்ற வந்தேன்! தெரியாமல் ஏதேதோ உளறுகிறாயே!

கலிக்: சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஆசையை நிறைவேற்ற வந்தாரா?......ஆகா! நன்றாக இருக்கிறதே நீங்கள் கூறும் நொண்டிச் சாக்கு! அடிமை, ஆண்டவனுக்குக் கட்டளை இடுவதாம்! அதைத் தலைமேல் தாங்கி ஆண்டவன் வேசி வீட்டுக்கு வருவதாம்! எங்கே அந்த சுந்தரன்? கொண்டுவா அவனை! சுவாமிகளாம்! அடியாராம்! முற்றுந் துறந்தவனாம்! ஆசையை அறவே அறுத்தவனாம்! அயோக்கியன்! அவனை உங்கள் முன்னாலேயே கொன்றுபோடுகிறேன்!...

தியா: (நெற்றிக் கண்களைக் காட்டி)... என்ன சொன்னாய்?...என் சுந்தரனைப் பழித்துக் கூறிய உன்னை என்ன செய்கிறேன் பார்!....இந்தா, பிடி சாபம்!... இன்றிலிருந்து வயிற்றுவலியால் அவதிப்படுவாயாக!

[கடவுளின் கோபத்தால் ஏயர்கோன் வயிற்றுவலியால் துடி துடிக்கிறார்.]

கலிக்: தியாகேசா!...ஐயனே!... வலி தாங்கமுடியவில்லையே!... ஐயோ!...ஆண்டவனே! என்னைக் காப்பாற்று!...

தியா:........முடியாது!........அன்பனே!...உனக்கு வந்திருக்கும் வயிற்றுநோயைப் போக்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு! சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்து இதனைப் போக்கினால் ஒழிய, வேறு யாரும் போக்க முடியாது!

கலிக்: "வேண்டுதல் வேண்டாமை" இலாதவனே! நீயா இப்படிப் பேசுகிறாய்? ஐயனே! உன்னை விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளெனக் கருதி, யானும் என் மூதாதையரும் நீரே தலைவர் என்று நினைத்து வாழ்ந்து விட்டோம்! உம்து அடியவனாகிய எனக்கு வந்த இந்த வயிற்றுவலியை நேற்று உம்மாலே ஆட்கொள்ளப் பட்டவனாகிய சுந்தரமூர்த்தியா தீர்க்கப்போகிறான்? அப்பா அவன் வந்துதான் என்னுடைய நோய் தீருமென்றால்

[தொடர்ச்சி பக்கம்—



வெள்ளி 22—11—57 சென்னை

‘முன்ஷியிசம்’

மீண்டும் உணவுப் பிரச்சினை மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. அதிலும் அரிசி உண்போர் தலையிலே தான் இந்த முறையும் பேரிடிகள் தொடர்ந்து விழ இருக்கின்றன.

வந்திருக்கும் ஆபத்தை அறிவிப்பதைப்போல் சென்னை மாநிலத்தில் **500**—ஆக இருந்த நியாய விலைக் கடைகள் **1000**—ஆக இரட்டிக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரை ஒரு தடவைக்கு இரண்டு படியாக அரிசி தந்தவர்கள் இனிமேல் ஒரு படி அரிசிதான் கொடுப்பார்கள். அத்துடன் பொதுமக்கள்பால் கருணை கொண்டு ஒரு படி கோதுமையையும் கொடுப்பார்களாம்!

இந்த நிலை இப்போது மட்டுமல்ல; சம்பா மகசூல் வந்த பிறகும்—அதாவது அடுத்த பிப்ரவரி மாதத்திற்குப் பிறகும்கூட இந்த நியாய விலைக் கடைகளை நீடிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதாம்.

—இப்படியெல்லாம் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்!

உணவு நிலைமை இவ்விதம் கவலைக்கிடமான கட்டத்தை அடைந்திருந்த போதிலுங்கூட தஞ்சை மாவட்டத்திலிருந்து கேரளம் நோக்கிச் செல்லும் அரிசிப் பரிவர்த்தனை தடைக்கப்படவில்லையாம்.

மேலும் இப்போது கேரள மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தஞ்சை மாவட்டத்திற்கே வந்து கொள்முதல் செய்து கொண்டிருக்கிறாராம்.

—இருந்தாலும் நியாய விலைக் கடைகளை அதிகரித்துக் கொண்டிருக்கும் சென்னை அரசாங்கத்திற்கு கேரள அரசின் இந்த கொள்முதல் வேலையைத் தடுத்து நிறுத்திவைக்கும் அதிகாரம் கிடையாது. அத்தகைய அதிகாரத்தை மத்திய அரசாங்கம் பிரித்து வைத்த பிராந்திய அமைப்பு அனுமதிக்கவில்லை!

இதுபோன்ற சங்கடமான நிலையிலே மாநில—மத்திய அரசாங்கத்தின் போக்கு என்ன? உணவு நெருக்கடியைச் சமாளிக்க அவர்கள் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்யப் போகிறார்கள்? அவையெல்லாம் எப்போது அமுலாகப் போகின்றன?

—என்பன போன்ற கேள்விகள் மக்கள் மன்றத்திலே தோன்றும் வேளைதான் இது. ஆனால் பதில் தான் திருப்திகரமாக அமைந்தபாடில்லை!

இப்போதே உணவு நெருக்கடி உதயமாகிவிட்டது என்கிறார்கள் பொறுப்பான இடத்துக்குரியவர்கள்.

“அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. சமீப எதிர்காலத்தைக் குறித்து கவலைப்பட வேண்டாம் எனினும் **1958**—ம் ஆண்டில் ஏற்பட விருக்கும் கஷ்ட காலத்தைக் கடப்பது சிரமந்தான்”—இப்படிக் கூறுகிறவர்களும் காங்கிரஸ் கட்சியிலும் அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கிறவர்கள்தான்!

இந்த ஆண்டு கவலைப்பட வேண்டாம்—என்று பொதுமக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகத்தான் அவர்கள் அடுத்த ஆண்டு வருகிறது ஆபத்து என்று அபாயச் சங்கு ஊதுகிறார்கள். ஆனால் அதன் விளைவோ. எதிர்மறையாக இருக்கிறது. அடுத்த ஆண்டு பற்றாக்குறை ஏற்படுமென்பது திட்டமாகக் கணிக்கப்பட்டு விட்டதால் பதுக்கல் பெருச்சாளிகள் அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் பயங்கரப் பணியைத் துவக்குவதற்கு இப்போதிருந்தே திட்டமிட்டுத் துவங்கி விட்டார்கள்!

இதற்கெல்லாம் மாற்று என்ன தயாரித்திருக்கிறார்கள்?

சென்னையைப் பொறுத்த வரையில் நியாய விலைக் கடைகளை இரட்டித்ததைத் தவிர குறை தவிர்க்கும் அவசரத் திட்டங்கள் என்ன இருக்கின்றன அவர்களிடத்தில்?

—இதுபற்றிய வழி முறைகளை விவாதிக்க சென்ற கிழமை இரு தினங்கள் புதுடில்லியிலே அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிற்று.

அங்கே கூடியவர்கள் குறுகிய கால வேலைத் திட்டம் என்னும் பெயரிலே சில விசித்திரமான யோசனைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

எப்படிப்பட்டது அவர்கள் யோசனை? இந்த ஆண்டு இறுதிக்குள் பர்மாவிலிருந்தோ; சயாமிலிருந்தோ, டன் கணக்கில் அரிசியைத் தருவிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறார்களா? அல்லது பதுக்கல் வியாபாரிகள்மீதெல்லாம் கடுமையான நடவடிக்கை எடுத்து; மறைத்து வைக்கப்பட்டிருக்கும் தானியத்தைச் சந்தைக்குக் கொண்டுவர வேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறார்களா?

இல்லை; இல்லை.

முன்பு பருவ மழை பெய்தபோது என்ன யோசனை கூறினார்கள்?

நாடெங்கும் ‘மரம் நடு விழா’ என்னும் பெயரிலே செடிகளை நட்டார்கள். அதாவது அந்தச் செடிகள் நன்கு வளர்ந்து; நீண்டு; உயர்ந்து; மரங்களாகி; பின் அந்த மரங்களின் உதவியால் காற்று பலப்பட்டு; மேகங்கள் இழுக்கப்படவேர; பிறகு மழை பெய்யுமாம்!

—இவ்வளவு காரணங்களையெல்லாம் உத்தேசித்து செடி நட்டார்கள்! வன மகோத்சவம் கொண்டாடினார்கள்!

அதேபோலத்தான் இந்த ஆண்டு உணவுப் பஞ்சம் வந்து விட்டது. அதற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய ஆக்க வேலைகள் என்ன?

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூறியிருக்கும் ஆலோசனைகளைப் படியுங்கள்:

உணவு தானியங்களை வீணாக்குவதை எல்லாம் தவிர்க்க வேண்டும். உணவு தானியங்களை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். சிற்றுண்டி சாலைகள், ஓட்டல்கள் போன்ற ஸ்தாபனங்கள் இது விஷயமாக விசேஷ கவனம் செலுத்த வேண்டும். விருந்துகள் முதலியன மிகக் குறைந்த அளவில் ஒரு வரையறைக்குட்பட்ட அதிதிகளுடன் நடக்க வேண்டும்.

அரிசியே பிரதான உணவுப் பொருளாக இருக்கு மிடத்தில் சாப்பாட்டில் ஒரு பகுதி கோதுமையினாலும் இதர உணவு தானியங்களாலும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

குறுகிய காலப் பயிர்களை உற்பத்தி செய்யும் வேலையை உடனே கட்டுப்பாடான முறையில் மேற்கொள்ள வேண்டும். உருளைக் கிழங்கையும், வாழைப் பழத்தையும் பிரதான உணவாக உபயோகிக்க வேண்டும்.

கிடைக்கும் சிறு துண்டு நிலத்தைக்கூட காய்கறி உற்பத்திக்குப் பயன் படுத்த வேண்டும். உஸார், உப்பு நிலங்களில் அவற்றிற்கேற்ப பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

அதிகமாக மீன் சாப்பிட வேண்டும்.

—இவை போன்றவைகள்தான் நாட்டில் நிலவிவரும் அரிசிப் பஞ்சத்தைப் போக்குவதாகாக அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி எடுத்தியம்பி யிருக்கும் குறுகிய காலத் திட்டங்கள்!

உணவு தானியங்களை வீணாக்காமல் தடுப்பதும்; அவற்றைப் பத்திரமாகப் பாதுகாப்பதும்; விரிவான விருந்துகள் நடத்துவதைக் கட்டுப்படுத்துவதும்; உருளைக் கிழங்கையும், வாழைப் பழத்தையும் முக்கிய உணவாகச் சாப்பிடுவதும்; காய்கறிகளை அதிகமாகப் பயிரிடுவதும்; அதிகமாக மீன் சாப்பிடுவதும்—ஆக இது போன்றவைகளைத் திறம்பட நடத்துவதற்குப் பெயர்தான் ‘குறுகிய கால உணவு வேலை’த் திட்டமாம்!

அதிகமாக மீன் உணவு சாப்பிட வேண்டும் என்று திட்டம் தீட்டிய அதே டில்லி மாநகரத்திலேதான் சில நாட்களுக்கு முன்பு அகில உலக மரக்கறி உண்போர் மாநாடு அதிவிமரிசையாக நடைபெற்றிருக்கிறது. அதில் குடியரசுத் தலைவர் உட்பட முக்கியமானவர்கள் பலரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அதே இடத்திலிருந்துதான் இப்போது தாக்கீது பறக்கிறது நாட்டு மக்கள் அனைவரும் அதிகமாக மீன் சாப்பிட வேண்டுமென்று!

அதிகமாக—அதுவும் உடனடியாக வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வது நிலைமையைச் சமாளிப்பதைவிட; அதிகமாக மீன் சாப்பிடுவதன் மூலம் உணவுப் பற்றாக் குறையைச் சமாளிக்கலாமாம்!

பாவம்; தேர்தலில் கற்ற பாடத்தோடு ‘முன்ஷியின் அரசியல்’ ஒரு முடிவுக்கு வந்து விட்டது என்றுதான் நினைத்திருந்தோம். ஆனாலும் இன்னும் ‘முன்ஷியிசம்’ முற்றிலும் மறைந்ததாகத் தெரியவில்லை!

“மழை யில்லையா? மரங்களை நடுங்கள்! மழை பெய்யும்!”

“சாப்பிடுவதற்குச் சோறு கிடையாதா? பருத்திக் கொட்டையைச் சாப்பிடுங்கள்; பசி சரியாகிவிடும்!”

—இதே முன்ஷிபாணியிலேதான் இப்போதும் சொல்கிறார்கள்; “அரிசி உணவுக்குப் பற்றாக் குறையா? எல்லோரும் மீன் சாப்பிடுங்கள்!” என்று!

முன்ஷியிசம் எப்போதும் வென்றதில்லை; அது போலத்தான் இந்தத் தடவையும் அது ஆகப்போகிறது என்பதில் ஐயமென்ன இருக்கிறது!

அரை உணவுக்கும் வழி இல்லை; அதையும் குறைக்க ஆலோசனையா?

"அய்யையோ! வீட்டிலே எலித் தொல்லை தாங்க முடியவில்லையே என்ன செய்வது?" என்று ஓலமிடுபவனிடம் ஒரு பை நிறைய எலிப் பாஷாணம் கொடுப்பதோ; அல்லது எலிப் பொறி ஒன்றைத் தருவதோ; அல்லது பூனை யொன்றைக் கொடுத்து வளர்க்கச் சொல்லி யோசனை தருவதோ அறிவுடைமையாகும்!

அதற்கு மாருக, "உன் வீட்டில் எலித் தொல்லை அதிகமாகி விட்டதா? குடியிருப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறதா? அப்படியானல் சரி; இன்று இரவு இரண்டு காலன் பெட்ரோல் வாங்கி ஊற்றி வீட்டுக்கு நெருப்பு வைத்துவிடு. பிறகு எலிகளின் தொல்லை அறவே ஒழிந்துவிடும்!" என்று ஆலோசனை தந்தால் அந்த ஆலோசனையை என்னென்பது?

★

"அய்யோ! எனக்கு வயிற்று வலி தாங்க முடியவில்லை. தினந் தினமும் என்னை வாட்டி வதைக்கிறது. கை மருந்துகளையெல்லாம் பரீட்சித்துப் பார்த்து விட்டேன். வலி தீர மார்க்கமொன்று சொல்லுங்கள், அய்யா!" என்று ஒருவன் கேட்டால் அவனுக்கு என்ன பதிலளிப்போம்?

டாக்டராக இருந்தால் நாடி பார்த்து; தக்க சிகிச்சை அளிப்போம்.

இல்லையானல், "வயிற்று வலிக்கு இவர் சிறந்த டாக்டர். அவரிடம் உடனடியாகச் சென்று உன் உடம்பைக் காட்டு!" என்று உபதேசிப்போம்.

அதை விட்டு; "உமக்கு தீராத வயிற்று வலியா? அதற்கு ஓரே வழி — ஒப்பற்ற வழி ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதாவது நீ உடனடியாகச் சென்று தூக்கு மாட்டிக் கொள். அல்லது ஆழமான கிணருகப் பார்த்து அதில் போய் விழு. மறுகணமே அந்த வலி உன்னை விட்டு நீங்கி விடும்!" என்று அறிவுரை கூறினல் அந்த அறிவுரையை என்னென்பது?

இந்த விசித்திர ஆலோசனையையும் அறிவுரையையும் போலத்தான் இருக்கிறது இந்தியாவின் முதல்வர் பண்டித நேரு அரிசிப் பற்ருக் குறையைத் தவிர்ப்பதற்குக் கூறிய உபதேசமும்!

அரிசிப் பற்ருக்குறை இந்திய உபகண்டத்தின் இமாலயப் பிரச்சினையாகி விட்டது!

பண்டிதரின் பஞ்சசீலத்தையே மறைக்கின்ற அளவுக்கு இந்தக் குறைபாடு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கரித்தவாறே இருக்கிறது

அடுத்த ஆண்டு மிகவும் சோதனையான காலம்—என்று பொருளாதார நிபுணர்கள் ஆரூடம் கணித்து விட்டார்கள்!

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் ஐந்தாண்டுத் திட்டங்களிலேயுள்ள ஓட்டை உடைசல்கள் காதித் திரையால் மூடி மறைக்க முடியாத அளவுக்குப் பாமரர் கண்களுக்கும் தெரிய ஆரம்பித்து விட்டன.

நியாய விலைக் கடைகளாலும் உணவுப் பொருள்களுக்கான நியாய விலையை நிர்ணயிக்க முடியவில்லை!

நாடெங்கும் "அரிசி! அரிசி!" என்ற கோஷம் வானைப் பிளக்கிறது!

இந்த நேரத்தில்தான் பண்டித நேரு நவம்பர் 17-ம் தேதியன்று ஒரு யோகாஸ்ரம ஆண்டு விழாவைத் துவக்கி வைத்த போது பேசியிருக்கிருர், "குறைத்துச் சாப்பிடுங்கள்!" என்று!

அரை வயிற்று உணவுக்கும் வழியில்லை என்று ஆலை வாய்க் கரும்புபோல் அவதிப்படுகிருர் பெரும்பாலோர்.

இந்த நிலையில்தான் பண்டிதர் 'குறைத்துச் சாப்பிடுங்கள்' என்று இதோபதேசம் செய்ய வந்து விட்டார்!

முழுப் பசியைத் தீர்க்குமளவுக்கு அரிசி உணவு கிடைத்தால் அல்லவோ குறைத்துச் சாப்பிட முடியும்?

வெறும் வயிறு கூக்குரலிட்டுப் புரட்சி செய்யும்போது; குறைத்துச் சாப்பிடச் சொல்லி என்ன பயன் கிடைக்கப் போகிறது?

அரிசி பற்ருக்குறை; எனவே வாயையும் வயிற்றையும் கட்டிக் குறைத்துச் சாப்பிடுங்கள் என்பதற்கும்;

"எலிகளின் தொந்திரவு தாங்க முடியாது; அதனல் வீட்டைக் கொளுத்துங்கள்!"—

"வயிறு வலியா? தற்கொலை செய்து கொள்ளுங்கள்"-

—என்பதற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

பண்டித நேரு கூறியிருக்கிருர் என்பதைத் தவிர இந்த உபதேசத்திலே என்ன பெருமை இருக்கிறது?

பண்டிதர் மேலும் பேசியிருக்கிருர்:

அரிசிச் சாதத்தை இலை முழுவதும் பரப்பிக் கொண்டு சிலர் சாப்பிடுவதைப் பார்த்து; அவர் ஆச்சரியப்பட்டிருக்கிருராம்!

நல்லவேளை; சிலர் என்று கூறியிருக்கிருர்; இல்லா விட்டால் அரிசி உணவு சாப்பிடும் தமிழர்கள் அனைவருமே 'சாப்பாட்டு ராமன்'கள்—என்று புதிய பட்டமொன்றையே சூட்டியிருப்பார்!

இலை முழுவதும் அரிசி உணவைப் பரப்பிக் கொண்டு சிலர் சாப்பிட முடியாமல் சாப்பிடுவதைப் பண்டிதர் எங்கே பார்த்திருப்பார்?

நிச்சயமாக அவர் இந்தக் காட்சிகளை அடிக்கடி வட நாட்டிலே பார்த்திருக்க முடியாது!

பிறகு எங்கே பார்த்திருக்க முடியும்?

சென்னைக்கு அவர் வரும் போதெல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சீமான்களும்; மிட்டா மிராசுதாரர்களும் அவருக்குத் தருகிருர்களே விருந்து; அந்தச் சந்தர்ப்பங்களிலேதான் அரிசி உணவை இலை முழுவதும் பரப்பிக் கொண்டு மூச்சு திணறும் அளவுக்குச் சாப்பிடும் பயங்கரக் காட்சியைக் கண்டிருக்க வேண்டும்!

ஆக; "இலை முழுவதும் அரிசி உணவைப் பரப்பிக் கொண்டு வயிறு வெடிக்கச் சாப்பிடாதீர்கள்," என்று அவர் உபதேசிக்க வேண்டியது தென்னுட்டுக் காங்கிரஸ் பிரமுகர்களைப் பார்த்துத்தான்!

பாவம்; தவருன இடத்தில் எல்லா அரிசி உணவுக்காரர்களுக்கும் பொருந்தாத இந்த உபதேசத்தை உதிர்த்து விட்டார், பண்டிதர்!

மேலும் பண்டிதர் பேசியிருக்கிருர்:

"என்னிடம் பிரபல வைத்தியர் ஒருவர் கூறினர்; பெரும்பாலான வியாதிகளுக்கெல்லாம் காரணம் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவதுதான் என்று!"

ஆக; டாக்டரின் கூற்றையும், அதைப் பண்டித நேரு நம்பியதையும் பார்க்கப்போனல் இந்திய உப கண்டத்தின் இன்றையப் பிரச்சினை வறுமையல்ல; பசியல்ல; பட்டினியல்ல; அதனல் நேரும் பஞ்சமல்ல—அதிகப்படியாக உணவு உட்கொள்ளுவதுதான்!

அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது பண்டிதருடைய சொற்பொழிவை எண்ணிப் பார்த்தால்!

இன்னென்றும் உண்டு—பண்டிதர் கலந்தாலோசித்தது 'பிரபல வைத்தியரை!'

அந்தப் பிரபல வைத்தியர் தன்னிடம் வரும் நோயாளிகளைக் கொண்டுதான் அந்தக் கடைந்தெடுத்த உண்மையைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்!

'பிரபல' வைத்தியரிடம் செல்லும் நோயாளிகள் எப்படிப் பட்டவர்களாக இருப்பார்கள்?

நாளெல்லாம் குதிரையைப் போல் நரம்பு தெறிக்கத்தெறிக்க ரிக்ஷா இழுப்பவனு தனது நோய்க்கு மருந்து தேட 'பிரபல' வைத்தியரைக் தேடிச் செல்வான்?

அல்ல; அல்ல!

பணக்காரர்களால்தான் 'பிரபல' வைத்தியரைத் தேடிச் செல்ல முடியும்; பிரபல வைத்தியர் எழுதிக் கொடுக்கின்ற மருந்தை வாங்கிச் சாப்பிட முடியும்!

ஆக; அந்தப் 'பிரபல' டாக்டர் சொன்னது பணக்காரர்களைப் பொறுத்த மட்டில் வேண்டுமானல் உண்மையாக இருக்கலாம்!

—அதை வைத்துக் கொண்டு தான் அரிசி உண்போர் அனைவரையுமே இழிவு படுத்திப் பேசி விட்டார், பண்டிதர்!

பாவம்; அவர் பிரபலமானவர்! அவருக்கு ஆலோசனை வழங்கியவரும் பிரபலமானவர்! என்ன செய்வது!

நமது இலட்சியம்!

"தி. மு. கழகம், எந்தப் பிரச்சினையானலும் உண்மை எந்த முனைநோக்கி ஓடுகிறதோ, அந்த முனைநோக்கியே அதனைத் தேடிச் செல்கிறது.

"கோலார் தங்கச் சுரங்கத்தில், நேரே கீழே இறங்கினல் நாம் தங்கத்தைப் பார்க்க முடியாது; பாறை எந்தப் பகுதியிலிருக்கிறதோ, அந்தப் பகுதியில்—தங்க ரேகை எங்கே ஓடுகிறதோ அங்கு வெட்டிய பிறகுதான் தங்கத்தைக் காண முடியும். உண்மையும் அப்படித்தான். தங்க ரேகை நேராக இல்லாமல் வளைந்து வளைந்துதான் செல்லும். அப்படித்தான் உண்மையும் வளைந்து வளைந்து செல்லும். அது ஓடும் பக்கத்தைக் கண்டு பிடிக்கும் திறனும் மனப்போக்கும் வேண்டும். உண்மை என்னும் அந்தத் தங்கரேகை நோக்கித்தான் தி. மு. கழகம் செல்கிறது.

"தி. மு. கழகம் தன் மனதுக்குச் சரி என்று படுவதை திட்டவட்டமாகத் துணிவுடன், அச்சம்—தயை—தாட்சண்யமின்றி, ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லி அதற்கெனப் பாடுபடுகிறது."

—அறிஞர் அண்ணு

சென்ற இதழில்...

● கணவனின் உடலைக் கருக்கிக் கொண்டிருந்த தீயிலே உடன்கட்டை ஏறப் புகுந்த புவனா எல்லோரும் நினைத்ததைப் போல் சாகவில்லை. தீ அவளது உடலைத் தீண்ட விடாது, தீக் குணம் கொண்ட தலைமைப் புரோகிதன் சிதையிலே உள்ள ரகசிய வழியாக அவளைக் கவர்ந்து சிறை வைக்கிறான். ஆலயத்துத் தனி அறையிலே அவளது கற்பைச் சூறையாட முயலும் போது சோமேசரின் ஆலயம் கஜினியின் கையில் சிக்கிவிட்டதை ஓடிவந்து தெரிவிக்கிறாள், தேவதாசி திலோத்தமா. புவனாவை அவளது கண்காணிப்பிலே விட்டு விட்டு ஓடுகிறான் தலைமைப் புரோகிதன்......



12

"தேவதாசி!"— அந்தச் சொல் புவனாவின் உள்ளத்தில் சென்று என்னவோ செய்தது. அந்த உணர்ச்சி ஒரு கணம்தான் இருந்தது. பிறகு, அந்தத் துன்ப இல்லத்தில் அன்புருவாய் நின்று, அபயமளித்து, ஆறுதல் பேசிடும் திலோத்தமாவின் உருவத்தை பக்தியுணர்ச்சியோடு நோக்கினாள். "ஏன் திலோத்தமா, அநீதிக் கிடங்காகிய இங்கே அன்புள்ளம் படைத்த உன்னால் எப்படி வாழ முடிகிறது?......உன்னுடைய..."—புவனா பேச்சை முடிக்கவில்லை!

"நீ கேட்பது எனக்குப் புரிகிறது...எங்களுக்கு இந்த வாழ்க்கை பழகிப்போய் விட்டது. பரம்பரையாகவே இந்த ஈன வாழ்க்கைக்கு நாங்கள் பழக்கப் படுத்தபபட்டு விட்டோம். திருடுவதையே குலத்தொழிலாகக் கொண்டுவிட்டவர்கள். அதிலேதும் அவமானம் இருப்பதாகக் கருதவில்லையே... ஆனால், என்னுடைய மனச்சான்று மட்டும் இந்த அவல வாழ்க்கையை எண்ணி அடிக்கடி கூக்குரலிடுகிறது...அதனால் வேதனை பெருகுகிறதே தவிர, விமோசனம் ஏற்பட வழி?... சரி, சரி! நான் காரியததை மறந்துவிட்டேனே! அந்தக் கிழ மகிஷம் வருவதற்குள்ளாக நீ தப்பிப் போய்விடு...நகரெங்கும் ஒரே குழப்பம்...முகம்மதிய நீசர்கள் கோட்டைக்குள் புகுந்து விட்டார்களாம்...இதுதான் சரியான சமயம்! என் பின்னே வா! நான் காட்டுகின்ற பாதை வழியாக விரைந்து வெளியே செல்...," என்று மூச்சுவிடாமல் திலோத்தமா பேசினாள்.

"திலோத்தமா, உன் அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்...? ஆனால், உன் கதி? நான் தப்பி விட்டதற்கு நீதான் காரணமென்று அந்தப் பழிகாரன் உன்னை சித்ரவதை செய்வானே? எனக்குக் காவலாக அல்லவா உன்னை வைத்துவிட்டுப் போனான்! நீ இதுவரைப்பட்ட வேதனைகள் போதாதென்று என் பொருட்டுமா கொடுமைகள் அனுபவிக்க வேண்டும்..?"

"விவாதிக்க இது நேரமல்ல சகோதரி! நீ தப்பிப் போ! மக்களிடம் கொடுமைகளை எடுத்துச் சொல்லு! உடன்கட்டை ஏறியவள் உயிர்பெற்று வந்துவிட்ட அதிசயத்தை அவர்களிடம் எடுத்துக் கூறு; அதைக் கேட்ட பிறகாவது சோமநாதபுரத்து மக்கள் அறிவு பெறட்டும்...என்னைப் பற்றிக் கவலைப் படாதே!"

"உன்னைப்பற்றி இனிமேல் நான் எப்படி திலோத்தமா, கவலைப்படாமல் இருக்க முடியும்? நான் மட்டும் இனிமேல் யாருக்காக வாழப்போகிறேன்...? என் குழந்தை—அது மட்டும் இல்லையானால்—நிம்மதியாக இப்பொழுதே, இங்கேயே உயிர்விட்டு விடுவேன்..."

"புவனா, நானே அந்தப் பாவ உருவமான புரோகிதனைப் பழி தீர்த்து விடுவேன். ஆனால்... ஆனால்...அந்த சாது-வாழ்க்கையில் முதன் முதலாக என் உள்ளத்தை நெகிழச் செய்த அந்த அன்பின் தூதுவர்—அவரை மட்டும் ஒரு முறை பார்த்து விட்டால் போதும்... பிறகு துன்பங்களெல்லாம் எனக்கு மலர் மாலையாகிவிடும். எத்தனையோ ஆண்டுகளாகக் கூம்பிக் கிடந்த என் இதயத் தாமரையை அருள் நோக்கால் மலரச் செய்த அந்த சாது..."

திலோத்தமா பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் யாரோ வரும் காலரவம் கேட்டது. "புவனா! வா என்னோடு," என்று கூறி, அவளுடைய கரங்களைப்பற்றி இழுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினாள் திலோத்தமா. இருள் நிறைந்த படிக்கட்டுகளில் தடுமாற்றம் ஏதுமின்றி புவனாவை அழைத்துக் கொண்டு வேகமாக இறங்கினாள். இருவரும் ஒன்றும் பேசவில்லை; பேச நேரமோ, வாய்ப்போ இல்லை. சிறிதுநேரம் நடந்தவுடன், "புவனா, கதவைத் திறந்தவுடன் ஒரு மண்டபம் தென்படும். அந்த மண்டபத்தில் ஒரு பல்லக்கு இருக்கும். இதோ, நான் கொடுக்கும் இந்த மோதிரத்தைப் பல்லக்குக்காரர்களிடம் காட்டு. அவர்கள் உன்னைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு போய் உன்னுடைய வீட்டில் விட்டு விடுவார்கள்," என்றாள் திலோத்தமா.

கையில் மோதிரத்தை வாங்கிக் கொண்ட புவனா, கண்களில் நீர் மல்க திலோத்தமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். "திலோத்தமா, நாம் என்றாவது மீண்டும் சந்திப்போமா?" என்றாள் புவனா.

"சோமேசரின் அருள் இருந்தால் கட்டாயம் சந்திப்போம்.... சரி, நேரமாகிறது...போய் வா, புவனா!"—திலோத்தமாவின் நாக்குக் குழறியது.

புவனா போகும்வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திலோத்தமா வேறு பாதையின் வழியாக மேலேறிச் சென்றாள். கனவு கண்டவள்போல் குழப்பம் மேலிட நடந்து சென்று கொண்டிருந்தாள் புவனா. பாதை முடிந்து விட்டது. ஒரே இருட்டு! கைகளால் தடவினாள். கதவும் தாழ்ப்பாளும் தென்பட்டது. மகிழ்ச்சி பொங்க தாழ்ப்பாளைத் திறந்தாள்.

"நகராதே, நில்!"

எங்கிருந்தோ ஒரு குரல் பயங்கரமாக ஆணையிட்டது. திரும்பிப் பார்த்தாள். தீப்பந்தங்கள் வழி காட்டத் தலைமைப் புரோகிதன் எங்கிருந்தோ படிக்கட்டுகளின் வழியாக இறங்கி வந்து கொண்டிருந்தான்.

"புலியிடமிருந்து மான் தப்பி விட்டால் பிறகு புலிக்கென்ன மதிப்பிருக்கிறது? புவனா, உன் முயற்சி என்னாயிற்று பார்த்தாயா? இப்பொழுதாவது தேவப்ரீதி எது என்பதை உணர்ந்து கொண்டாயா?"

புவனா பதில் பேசவில்லை. என்ன பேசுவாள்? என்ன பேச முடியும்? அப்படியே 'திக்பிரமை' பிடித்து நின்றாள். மறு கணமே, புரோகிதன் அவளை குழந்தையைப்போல் மார்போடணைத்துத் தூக்கிக் கொண்டு, படிக்கட்டுகளில் ஏறினான். அவள் திமிறினாள். வயோதிகக் கரங்களுக்கிருந்த வலுவை அப்பொழுதுதான் புவனா உணர்ந்தாள்.

* * *

கஜினி முகம்மதுவின் படைகளின் கடும் தாக்குதலால், ராஜபுத்ரப் படைகள் சிதறி ஓடின. கஜினியின் குதிரை சுழன்று வரும் கத்திகளையும் பாய்ந்து வரும் ஈட்டிகளையும் லட்சியம் செய்யாமல் விரைந்து சென்று கொண்டிருந்தது. எங்கும் பிண மலை; அழு குரல்! கஜினி எதையுமே லட்சியம் செய்யவில்லை; சென்று கொண்டேயிருந்தான்.

சோமநாதபுரத்துக்குள் அவனுடைய படைகள் நுழைந்து விட்டன. இஸ்லாமிய வீரர்கள் வீடுகளைக் கொளுத்தியும் பொருள்களைச் சேதப்படுத்தியும் சோமநாதபுரத்துத் தெருக்களில் வெற்றி ஊர்வலம் வந்து கொண்டிருந்தனர். காதலியரையும் மழலைச் செல்வங்களையும் தாயகத்திலே விட்டு வந்து விட்ட முகம்மதிய வீரர்கள் மனம்போனபடி நாசவேலை செய்தாவது ஆறுதல் பெறட்டும் என்று கஜினியும் அவர்களுக்குக் கட்டுப்பாடு ஏதும் விதிக்கவில்லை. கலையின் இருப்பிடமாக, களியாட்டங்களின் பிறப்பிடமாக, இந்து மதத்தின் புனிதபீடமாக இருந்த சோமநாதபுரம் இஸ்லாமியர்களின் வேட்டைக் காடாகி சுடுகாடு போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது. கலை மெருகேற்றப் பட்டிருந்த அகில் 'தூண்கள்' கரி மரங்களாக நின்று கொண்டிருந்தன. சுதை கொண்டு

[தொடர்ச்சி பக்கம்—8]

ஏழை முகம் பாரீர்!

[**14—11—57** அன்று சென்னை சட்ட சபையில், சாகுபடியாளர் நியாயவாரச் சட்டத் திருத்த மசோதாவின்மேல் நடைபெற்ற விவாதத்தின் போது மு. கருணாநிதி ஆற்றிய உரை கீழே தரப்படுகிறது.]

சட்ட மன்றத் தலைவரவர்களே!, திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவை ஒட்டி என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த சட்ட மன்றத்தில் விவசாயிகளுடைய நிலைமைகளைப் பொறுத்தும், அண்மைக் காலங்களில் பல மாவட்டங்களில் சர்க்காரால் புதிதாக வகுக்கப்பட்டுள்ள சட்டத்திலே இருக்கின்ற ஓட்டை உடைசல்களை புத்திசாலிகள் பயன் படுத்திக் கொள்ளுகிற காரணத்தால எந்த எந்த இடையூறுகளுக்கு அவர்கள் ஆளாகி இருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் பலமுறை நான் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

சட்ட மன்றத்தில் மாத்திரம் அன்றி, அமைச்சர் அவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அதைப் பற்றிய விளக்கங்களை எடுத்துத் தந்திருக்கிறேன். விவசாயிகள் நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாக அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டமும், நியாய வாரச் சட்டமும் கொண்டு வரப்பட்ட போதிலும்கூட, சாணக்கிய தந்திரம் படைத்த சிலர் எப்படியோ இருக்கக்கூடிய சந்து பொந்துகளில் நுழைந்துகொண்டு தங்களுக்குச் சாதகமாகவும், விவசாயிகளுக்குப் பாதகமாகவும் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் அநேக இடங்களில் உறவு பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டொரு வாரங்களுக்கு முன்பும் ஒரு திங்களுக்கு முன்பும் நடைபெற்று இருக்கிற சம்பவங்கள் இந்தச் சபைக்கு நன்கு தெரியும்.

திருச்சி மாவட்டத்தில் கை ஏர், மாட்டு ஏர்க்காரர்கள் 'முச்சலீகா' எழுதிக் கொடுத்தவர்கள் என்ற அளவிலே ஏறத்தாழ பத்தாயிரம் விவசாயிகள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் சாகுபடி செய்கின்ற மொத்த நிலத்தின் பரப்பு பத்தாயிரம் ஏக்கர் நிலமாகும். அந்த பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் பாடுபடுகின்ற விவசாயிகள் இந்த சட்டத்தினுடைய உள்நோக்கத்தை நல்ல முறையில் அனுபவிக்கிறார்களா என்று பார்த்தால், அவர்கள் அந்த அளவு அனுபவிக்க முடியவில்லை என்பதையும், அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் சபை அறியும்; அமைச்சர்களும் நன்கு அறிவார்கள். நங்கவரத்தில் ஏற்பட்ட அறப்போரில் நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அதையும், அதனுடைய அவசியத்தையும் புரிந்து கொள்ளாமல் அமைச்சர் பெருமக்கள், இந்த அறப் போராட்டம் ஒரு கட்சியினுடைய தனிப்பட்ட செல்வாக்குக்காகத்தான் நடைபெறுகிறதென்றும், உண்மையிலேயே விவசாயிகளிடத்திலே பணி ஆற்றுகின்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கோ—மற்றவர்களுக்கோ இல்லை என்றும் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டார்களே தவிர, பிரச்சினையை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதிலே அவர்கள் தங்களுடைய அவசரத்தைக் காட்ட மறுத்து விட்டார்கள். ஆனால் பல நேரங்களிலே ஒத்துக் கொண்டார்கள் இந்தச் சட்டத்தில் ஓட்டைகள் இருக்கின்றன என்று.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி..."

—என்ற பாடலை நினைப்பூட்டுகிற வகையிலேதான் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டுவந்த அந்தச் சட்டம் உடைக்கப்பட்ட தோண்டிபோல் ஆகிவிட்டது. சட்டத்தில் ஓட்டை இருக்கிறது; அதை அடைக்கவேண்டும் என்று சொல்லிவிட்டால் முடியுமா என்று கேட்பவர்களுக்கு நாம் ஒரு சாதாரண உதாரணம் கூறமுடியும்.

பெண்கள் வீட்டிலே இருக்கிற குடங்களில் ஓட்டை விழுந்தால் அவசியத்திற்கு புளியை வைத்து அடைத்து விடுவார்கள். அந்த முறையிலே ஓர் அவசரச் சட்டத்தையாவது போட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு இந்த அமைச்சர்கள் முன்வரவில்லை என்பதைக் காண உண்மையிலேயே என் வருத்தத்தைத் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை.

கல்யாணசுந்தரம் பெரியவரா—கருணாநிதி பெரியவரா என்பதற்காக போராட்டம் என்று குறிப்பிடப்படுகிறதே தவிர, இதன் நோக்கம் என்ன? ஏன் அங்கு இருக்கிற விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள்? அங்கே இருக்கும் நிலப் பிரபுக்கள் எப்படி எப்படி அவர்களை ஆட்டிப் படைக்கிறார்கள்—என்ற காரணத்தை அறிய அவர்கள் மறந்துவிட்டார்கள்.

நங்கவரத்தில் நடைபெற்ற போராட்டம் எவ்வளவு அமைதியாக நடைபெற்றது என்பதையும், எந்த அளவு காந்தியார் கூறுகிற அகிம்சை முறையில்—சாத்வீக முறையில் நடைபெற்றது என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் சபையில் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், ஒரு வேளை தனிப்பட்ட முறையில் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

போராட்டத்தில் நான் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் சென்னைக்கு வந்துவிட்ட நேரத்தில், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் கொஞ்சம் கட்டுக்கடங்காமல் போகவே, போலீஸ் அதிகாரிகள் அந்த விவசாயிகளைப் பார்த்து, "நீங்கள் கட்டுக்கடங்காமல்போனால் நான் உங்கள் அண்ணாவிடத்தில் சொல்வேன். குளித்தலையில் அண்ணா கூறியிருக்கிற கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகியவைகளை மறந்து விட்டீர்களா?" என்று அண்ணா அவர்கள் பேசிய பேச்சை போலீஸ்காரர்கள் எடுத்துக் காட்டி, அங்கே கொதித்தெழுந்த விவசாயிகளுக்கு அறிவுரை கூறினார்கள் என்றால், எந்த அளவுக்கு அந்தப் போராட்டத்தை நாங்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில் நடத்தினோம் என்பது புலனாகும்.

அந்தப் போராட்டம் எழுவதற்குக் காரணம் என்ன? நங்கவரத்தில் இருக்கும் தனிப்பட்டவர்கள்மீது உள்ள ஆத்திரமோ, வஞ்சமோ நியாயமாக இல்லை. நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் அங்கே இருக்கிற விவசாயிகளிடமிருந்து முச்சலிகா என்ற அந்தக் கொடுமையான அடிமை முறைச் சீட்டை எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சீட்டை போலீஸ் அமைச்சர் கூட பார்வையிட்டார்கள்; அவருக்கு ஞாபகமிருக்குமென்றே நினைக்கிறேன். கல்லணையில் அவர்கள் அதைப் பார்த்தபோது "இது ஜாருடைய சட்டம்போல் இருக்கிறது", என்று கூறியதாக எனக்கு ஞாபகம். அந்த அளவுக்கு விவசாயிகளை அடக்கி ஒடுக்குகிறார்கள். "நாங்கள் உங்களுக்கு அடிமைகளாக இருப்போம்; நிலத்திலே பாடுபடுவோம்; நீங்கள் கொடுத்ததை வாங்கிக் கொள்வோம்," என்று கூறுகிற அளவு முச்சலிகா நடமாடுகிறது. இந்தக் கொடுமையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு அங்கிருக்கும் 'ரெண்ட் கோர்ட்'டில் வழக்கு நடைபெற்றது. ஆனால் அந்த வழக்குகளை 'ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரி'டத்தில் மாற்றிக் கொள்ளக்கூடிய உரிமை அந்த விவசாயிகளுக்கு இருக்கிறதா என்றால், நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் 6(ஏ) ஷரத்தின்படி அவர்கள் "விவசாயிகள்" என்று ஒப்புக் கொள்ளப்பட்டால். அவர்கள் குத்தகைக்காரர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டதால்தான் அந்த வழக்குகள் — அவர்களுடைய உரிமையைப் பெறுகிற வழக்குகள்—நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற கொடுமையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்கிற நிலைமைக்கு மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற அந்த வழக்குகள் ரெவின்யூ டிவிஷனல் ஆபீ

துறைமுகம் தாரீர்!

[14—11—57 அன்று சென்னை சட்டமன்றத்தில், துறைமுகங்களை வளர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்து மு. கருணாநிதி பேசிய உரை இங்கு தரப்படுகிறது.]

சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே! கனம் திரு. என். எஸ். ராமலிங்கம் அவர்கள், துறைமுகங்களை வளர்க்க வேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தின் கருத்தினையொட்டி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் துறைமுகங்கள் தேவை என்று முன்பெல்லாம் வெள்ளைக்கார துரை முகங்களைப் பார்த்துக் கேட்டோம். இன்றைய தினம் நம்முடைய நாட்டு மந்திரிமார்களுடைய முகங்களைப் பார்த்து தமிழகத்தில் துறைமுகங்கள் நிரம்ப நிரம்ப வேண்டுமென்று கேட்கின்ற நிலைமையில்லை இருக்கிறோம்.

தமிழகத்தில் ஒரு காலத்திலே எந்த அளவுக்கு நல்ல துறைமுகங்கள் இருந்தன என்பதையும், அத்தகைய துறைமுகங்கள் வாயிலாக யவனத்திற்கும் கிரேக்கத்திற்கும் தமிழகத்தினுடைய மயில் இறகு, மிளகு போன்ற பொருள்கள், தமிழகத்தினுடைய சிறப்பான முத்துக்கள் எந்த அளவுக்கு ஏற்றுமதியாயின என்பதையும் நம்முடைய வரலாறுகள் விளக்கி நமக்குப் பெருமை அளித்துக் கொண்டிருக்கின்றன. காவிரிப் பூம்பட்டினம் என்று இன்றைய தினம் வழங்கப்படும் ஊர் பூம்புகார் என்று வழங்கி வந்தது. நான் பூம்புகார் என்று சொல்லும்போது ஒரு சிலருக்கு நான் ஏதோ 'புகார்' கூறுகிறேன் என்றுகூடத் தோன்றலாம்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறிமூடையும்
வடமலைப் பிறந்த மணியும்
பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல்
துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்

—என்று சொல்லக்கூடிய இந்தத் துணைக் கண்டத்தினுடைய பொருள்கள் அத்தனையும் வந்து குவிகின்ற மாபெரும் துறைமுகப் பட்டினம், பூம்புகார்! வெளி நாடுகளிலிருந்து சிறப்பான குதிரைகள் வந்து இறங்கும் பெருமை படைத்ததாகும். பூம்புகார் துறைமுகம் ஒரு காலத்தில் ஏற்றமும் வெற்றியும் பெற்று விளங்கியது. அத்தகைய துறைமுகம் இன்றைய தினம் கடலால் அழிக்கப்பட்டுப் போய்விட்டாலும்கூட, இன்று நாட்டிலே முற்போக்கும், நல்ல வளமும் வேண்டும் என்று விரும்புகிற இந்த அமைச்சரவை நாகப்பட்டினத்துத் துறைமுகத்தை விருத்தி செய்வதோடுகூட, தமிழகத்தினுடைய கரையோரங்களில் உள்ள துறைமுகங்களை விருத்தி செய்வதோடுகூட, மாமல்லபுரத்தில், இருந்து அழிந்துவிட்ட துறைமுகங்களையும் மீண்டும் புதுப்பிக்க முயற்சி எடுத்துக் கொள்வதோடுகூட, பூம்புகார் என்னும் பழைய துறைமுகத்தையும் மீண்டும் அங்கே தோற்றுவிக்கக்கூடிய முயற்சியையும் எடுத்துக்கொள்ளுமேயானால், இலக்கிய கால எழில்மிக்க துறைமுகம் ஒன்றை —தமிழகத்தினுடைய வாணிபத்தை உலகெங்கும் பரப்பிய அத்தகைய துறைமுகம் ஒன்றை மீண்டும் நாம் தோற்றுவித்தோம் என்ற பெருமைக்கு உள்ளாவோம்.

துறைமுகங்களை இங்கு ஏற்படுத்த வேண்டுமென்று கூறுகிற நேரத்தில் அமைச்சரவை வழக்கமாக திராவிட முன்னேற்றக் கழகத்தாருடைய கோரிக்கைகளுக்குத் தருகிற பதிலைத் தர முடியாது என்று கருதுகிறேன். வட நாட்டிலே இருப்பதுபோல் அணைக்கட்டுகள் தமிழ் நாட்டிலே வேண்டுமென்று கேட்டால், "இங்கே ஆறுகள் கிடையாதே; எப்படி அணைகட்ட முடியும்?" என்று ஒரு வரியிலே கூறி விடுவார்கள். இன்று அவர்கள் எங்கு நோக்கினும் விரிந்து பரந்து இருக்கிற நீலத்திரைக் கடலும், அந்த நீலத்திரைக் கடல் ஓரங்களில் எத்தகைய துறைமுகங்களைக் கட்டலாம் என்பதற்கான கணக்கும், அவர்கள் மறைத்தாலும் மறைக்க முடியாத அளவுக்கு விரிந்து பரந்து இருக்கிறது. 'ஆறு இல்லை; அதனால் அணைக் கட்டு கட்டவில்லை' என்று கூறுகிற அமைச்சரவைக்கு —'கடல் இருக்கிறது; நல்ல கரை இருக்கிறது; துறைமுகங்கள் இருந்த இடங்கள் இருக்கின்றன; நல்ல துறைமுகங்கள் அமைக்கலாமே!' என்ற யோசனையை நான் கூறுகிறேன்.

கன்யாகுமரி, மாவட்டத்தில் குளச்சல் என்னும் இடத்தில் ஒரு துறைமுகம் அமைக்க வேண்டும் என்று இங்கே யோசனை கூறப்பட்டது. கன்யாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்திருக்கிறது என்று பெருமையோடு கூறிக் கொள்ளும் அதே நேரத்தில், அந்த மாவட்டத்திலிருந்து நமக்கு ஒரு அம்மையாரும் அமைச்சராகக் கிடைத்திருக்கிறார்கள். அத்தகைய பெருமைக்குரிய மாவட்டத்தில் குளச்சல் தொகுதி அவ்வம்மையார் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாகும். அந்தத் தொகுதியில் இருக்கும் குளச்சல் துறைமுகத்தை மீண்டும் நல்ல முறையிலே ஆக்குவித்து, அந்தத் துறைமுகம் தமிழகத்தினுடைய பெருமையை நிலைநாட்டும் வகையிலே அமைவதற்கு இந்த அரசு நல்ல பலமுயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே மீண்டும் மீண்டும் நான் இந்த அவையைக் கேட்டுக் கொள்கிறேன்; அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய வாணிபம் ஒரு காலத்திலே ஏற்றம் பெற்று இருந்தது போலவே பலவேறு நாடுகளுடைய தொடர்பு கிட்டியது போலவே, மீண்டும் அந்தத் தொடர்பு வளர, இந்த ஒரு வகையிலாவது தமிழகம் முன்னேற, வளம் பெற, அந்தத் துறைமுகங்களை விருத்தி செய்ய வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இது எதிர்க் கட்சியிலேயிருந்து கொண்டு வரக்கூடிய கோரிக்கையல்ல; காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து — அந்தப் பகுதியிலிருந்து — வந்திருக்கிற காரணத்தால் இது நிறைவேறும். ஆகவே, இந்தக் காரியத்தை விரைவில் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, மீண்டும், அந்தப் பூம்புகார் துறைமுகத்தைத் தோற்றுவிக்கிற முயற்சியைக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை

நாம் மட்டுமே இருக்கிறோம்!

"சட்ட சபையில் நடைபெற்ற கடைசி விவாதத்தில் நான் பேசிய பிறகு, பெரிய காங்கிரஸ் தலைவர் ஒருவர் என்னிடம் வந்து, "நீங்கள் எவ்வளவுதான் பெரியாரை ஆதரித்துப் பேசினாலும், அவர் மறுபடியும் உங்களைத் திட்டிக் கொண்டுதான் இருக்கப் போகிறார்" என்று சொன்னார்.

"அந்த அளவுக்கு அவர் உடலில் விஷம் ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அவர் அப்படிக் கருதினாலும் சரி; வேறு எப்படிக் கருதினாலும் சரி; அவருக்காக நாங்கள் இந்த முடிவை எடுக்கவில்லை. நெடுங்காலத்துக்குப் பிறகு, சட்ட சபை நடவடிக்கைப் புத்தகத்தை யாரேனும் புரட்டிப் பார்ப்பார்களேயானால், 'பெரியாரை அடக்கி ஒடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதை எதிர்த்துப் பேச அப்பொழுது வேறு நாதியில்லை; ஒதுக்கப்பட்டாலும், விரட்டப்பட்டாலும், வெட்கத்துக்கும் வேதனைக்கும் ஆளான அண்ணாதுரையைத்தான் காண முடிகிறது' என்பதை உணருவார்கள்."

—அறிஞர் அண்ணா

இந்த நிலைமையை நாம் உன்னிப்பாக கவனிக்கும்போது அங்கிருக்கும் பத்தாயிரக் கணக்கான கை ஏர், மாட்டு ஏர்க்காரர்கள் குத்தகைக்காரர்கள் என்ற அடிப்படையிலே அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டால்தான், இந்தச் சட்டம், நியாயவார சட்டமாக இருந்தாலும் சரி, 60: 40 என்ற அந்த காமதேனு, கற்பக விருட்சம்—அது தருகிற பயனை அவர்கள் நிச்சயமாக அனுபவிக்க முடியும் என்பதை இந்த அவை உணரவேண்டும். அதைப்போல் தான் முச்சலிகா எழுதிக் கொடுத்தவர்களையும், குத்தகைதாரர்கள் என்று எழுதிக் கொடுத்தவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டாக வேண்டும். இந்த நிலைமையிலேதான் 'டெனன்சி அக்ரிமெண்ட்' என்ற அந்த ஒப்பந்தத்தின்கீழ் முச்சலிகாகாரர்களும், அங்கிருக்கும் கை ஏர், மாட்டு ஏர்க்காரர்களும் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இன்னொரு வழியிருக்கிறது—முச்சலிக்காரார்கள், கை ஏர்க்காரர்கள், மாட்டு ஏர்க்காரர்கள் -பத்தாயிரக் கணக்கான அந்த விவசாயத் தொழிலாளர்களை குத்தகை ஒப்பந்தம் என்ற பெயரிலே சேர்ப்பதற்கு ஏதாவது இடையூறு இருக்குமானால், சட்டப் பூர்வமான இடையூறு இருக்குமென்று சர்க்கார் கருதினால், பொதுவாகவே விவசாயி ஒப்பந்தம் என்ற முறையிலே, அந்த ஒப்பந்தம் என்ற ஒரே வார்த்தையை உபயோகித்து, குத்தகைதார் ஒப்பந்தமென்றோ கை ஏர், மாட்டு ஏர்க்காரர் ஒப்பந்தம் என்றோ தனித்தனியாகப் பிரிக்காமல், ஒப்பந்தம் என்ற பொதுச் சொல்லின்கீழ் அந்த விவசாயிகள் அத்தனை பேரையும் கொண்டுவர முடியும். அப்படிக் கொண்டு வந்தால்தான்—அந்த அளவுக்கு சட்டம் அவசர அவசரமாக உடனடியாகத் திருத்தப்பட்டால்தான், அங்கே கஷ்டப்படுகிற விவசாயிகள்—அங்கே நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற விவசாயிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், நிலப்பிரபுக்களுடைய கொடுமையிலிருந்து விடுபடுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், கை ஏர், மாட்டு ஏர்க்காரர்களை குத்தகை ஒப்பந்தம் என்ற அளவிலே அவர்களை குத்தகைதாரர்களாகச் சேர்க்கவேண்டும்; அல்லது அது சரியல்ல என்று சட்டப்பூர்வமாக கருதப்படுமானால் ஒப்பந்தம் என்ற பொதுச்சொல்லின் அடிப்படையிலாவது அவர்கள் சேர்க்கப்படுவார்களானால், விவசாயிகள் உண்மையிலேயே நிச்சயமாகப் பாதுகாக்கப்படுவார்கள் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி நண்பர் கலியாண சுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்த மசோதாவை ஒட்டி என்னுடைய [illegible]த்தை இந்த அவை முன்னால்

சோமநாதபுரத்துச் சிலை . . .

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

வனையப்பட்ட வண்ணச் சிற்பங்கள் மூளியாகிக் கிடந்தன. எத்தனையோ சிற்பிகள் இரவு பகல் கண்ட கனவுகளால் எழுந்த கலைச் செல்வங்கள் கற்பொடியாகிக் கொண்டிருந்தன. எத்தனையோ நூற்றாண்டுகளாகக் கலையின் திறன் கொண்டு எழுதப்பட்டுள்ள வரலாறு, மத வெறியால் புதிய திருப்பம் பெற்றுக் கொண்டிருந்தது!

சோமநாதபுரத்துக்குள் நுழைந்த கஜினி, பெண்களுக்கு எந்த விதமான தீங்கும் இழைக்கக்கூடாது என்று கண்டிப்பான உத்திரவு போட்டான். சோமநாதபுரத்துத் தெருக்களில் குதிரை மீதேறி கஜினி சென்றபொழுது, வாழ்க்கையின் மகத்தான லட்சியம் நிறைவேற இருப்பதை எண்ணிப் பெருமிதம் கொண்டான். ஆலயத்துக்குச் சென்று தன் அரிய பணியைச் செய்யுமுன், தான் கானகத்தில் சந்தித்த கட்டழகியைத் தேடிப் புறப்பட்டான். அவளுடைய இல்லத்தைத்தேடி அடைந்தபொழுது, அவள் கணவன் இறந்துபோய் விட்டதால் உடன்கட்டை ஏறி விட்டாள் என்ற செய்தி கஜினியைத் திடுக்கிட வைத்தது. கண்ட கனவுகள் சிதைந்து நாசமாக, கண்களில் நீர் பெருக கஜினி செய்வதறியாமல் குதிரைமேல் அப்படியே வீற்றிருந்தான். திடீரென்று அவனுக்கு அவளுடைய குழந்தையின் நினைவு வந்தது. அந்தக் குழந்தையைக் கொண்டு வரும்படியாகக் கட்டளையிட்டான். புவனாவின் உறவினர் குழந்தையைக் கஜினியிடம் கொடுக்க அஞ்சினர். ஆனால் கஜினியின் கட்டளையை எதிர்க்க அவர்களுக்கு என்ன ஆற்றல் இருக்கிறது? குழந்தையைக் கஜினி கையில் வாங்கிக் கொண்டவுடனே, அவன் அதை என்ன செய்யப் போகிறானோ என அங்குள்ளோர் குலை நடுங்கினர். கஜினி குழந்தையை அன்புடன் மார்போடணைத்துக் கொண்டான். குழந்தை சின்ன மலர் வாய்ச் சிரித்தபடியே அவன் கழுத்தில் கிடந்த முத்து மாலையைக் கைகளால் நெருடியது. கஜினியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் குழந்தையின்மேல் விழுந்தது. "மூட புத்திக்காரர்கள்...எப்படித்தான் அந்த அழகுச் செல்வத்தை நெருப்பிலிட்டுப் பொசுக்கினார்களோ," என்று முணு முணுத்துக் கொண்டான். அதற்குள் முகம்மதிய வீரன் ஒருவன் குதிரையின்மேல் வேகமாக வந்து சேர்ந்தான். "மகராஜ். ஆலயத்தின் வாயிலுக்கு முன்னால் ஆயிரக் கணக்கான புரோகிதர்கள் படுத்துக் கொண்டு உள்ளே விட மறுக்கிறார்கள்," என்றான்.

"மூட[illegible]ந்தி தனது கடைசித் திருவிளையாடலைப் புரிகிறது," என்று கூறிவிட்டு, "இந்தா, இந்தக் குழந்தையைப் பத்திரமாகக் கொண்டுபோய் என்னுடைய அந்தப்புரத்தில் சேர்," என்று குழந்தையை வந்தவனிடம் கொடுத்துவிட்டு சோமநாதரின் ஆலயத்தை நோக்கி குதிரையை வேகமாகச் செலுத்தினான் கஜினி!

கஜினி ஆலயத்தின் வாயிலை அடைந்தபொழுது பிரமித்து விட்டான்! ஏராளமான புரோகிதர்களும் பக்தர்களும் உயிரைத் திரணமாக மதித்து, "ஜெய் சங்கர், ஹரே சங்கர்!" என்று கோஷமிட்டுக் கொண்டே படுத்திருந்தனர். பல்லாயிரக் கணக்கான முகம்மதியக் குதிரை வீரர்கள், "அல்லாஹு அக்பர்" என்று சப்தமிட்டபடியே கஜினியின் கட்டளைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். கஜினி, எழுந்து வழிவிடும்படியாகப் பக்தகோடிகளை ஒருமுறை எச்சரித்தான்! பக்தகோடிகளோ, நடந்து விட்ட நாசத்தைக் கண்டும் சோமேசரிடத்தில் நம்பிக்கை குறையாதவர்களாய் கஜினி ஆலயத்திற்குள் அடியெடுத்து வைத்தவுடனே எரிந்து சாம்பலாகி விடுவான் என எண்ணிக் கொண்டு இறுமாந்து படுத்திருந்தனர். எச்சரிக்கை அவமதிக்கப்பட்டவுடனேயே கஜினியின் கண்கள் கோபக் குழம்பைக் கொட்டின! ஆவேசத்தோடு அணிவகுத்து நிற்கும் வீரர்களைப் பார்த்து கண்ஜாடை காட்டினான். நொடிப் பொழுதில் ஆயிரக் கணக்கான குதிரைகள் புரோகிதர்களின் தலைகளை நொறுக்கிக் கொண்டும் பக்தர்களின் எலும்புகளை முறித்துக் கொண்டும் தசையும் ரத்தமும் சேறாகக் குழம்ப ஆலயத்திற்குள் நுழைந்தன! எண்ணற்ற பக்தர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டு, சோமேசர் கஜினியின் வருகையை எதிர் நோக்கிக் கல்லுக்குள்ளேயே அடங்கிக் கிடந்தார்!

ஆலயத்தின், அழகிய வேலைப்பாடமைந்த பிரம்மாண்டமான சந்தனக் கதவுகளுக்கு இஸ்லாமிய வீரர்கள் தீ மூட்டி மகிழ்ந்தனர். அது எரிந்ததால் எழும்பிய புகையின் மணம், பிண வாடையையும் ரத்த வாடையையும் தாண்டி 'கம்' மென்று வீசியது. ஆலயத்தின் அழகையும் அது தாங்கி நிற்கும் கலைச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் எண்ணி வியந்தபடியே கஜினி முகம்மது ஆலயத்தினுள் நடந்து சென்றான். தூண்களில் பதிக்கப்பட்டிருந்த மணிகள் அவன் கண்களைப் பறித்தன. எதிரே நின்ற பெரிய லிங்கத்தையும், அதன் அருகே நிற்கும் சிறிய உருவமான தன்னையும் ஒரு முறை கஜினி பார்த்துக் கொண்டான். அவனையறியாமலேயே அவனுடைய உள்ளத்தில் ஓர் அச்சம் தோன்றியது. வேடிக்கையாக ஒரு முகமதியன் ஆலயத்தின் பெரிய மணியை ஓசைப்படுத்தினான். அதிலிருந்து கிளம்பிய 'ஓம்' காரநாதம் மண்டபத்தில் எதிரொலித்து 'ஓம் ஓம்' என்று ரீங்காரம் செய்தபொழுது, கஜினி ஒரு கணம் தன்னை மறந்து நின்றான்! சோமநாதபுரத்தின் அற்புதச் சிலையை—லிங்கத்தை— ஏறிட்டுப் பார்த்தான். லிங்கத்தின் கண்கள் ஒளி உமிழ்ந்தன. சிலை உடைக்க வந்த கஜினி சிலையின் கம்பீரத்தைப் பார்த்த பின் சிலையாக நின்றான்.

"அற்புதம் மகராஜ்! அற்புதம்!" என்றான் உட்பி.

"கலையும் கம்பீரமும் கலந்து காட்சி தருகின்றன!" என்றான் ஃபராபி.

"இந்த வான் முட்டும் சிலையின்மீது மக்கள் நம்பிக்கை வைத்திருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!" என்றான் பைரூனி.

"போர் வீரர்களே! ஏன் நிற்கிறீர்கள்? சிலை தூளாகட்டும்!" என்று உத்தர விட்டான் கஜினி.

கோயிலுக்குள் எஞ்சியிருந்த புரோகிதர்கள் கஜினியின் கால்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டனர். "மகராஜ், உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோம். நீங்கள் கற்பனை செய்ய முடியாத அளவுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுக்கிறோம். கோமேதகமா, புஷ்பராகமா, மரகதமா, வைடூரியமா? நவமணிகளில் எந்த வகை வேண்டும்; எவ்வளவு வேண்டும், என்று மட்டும் சொல்லுங்கள்......தங்களுக்குப் பாத காணிக்கையாக இப்பொழுதே செலுத்தி விடுகிறோம்...ஆனால் ஆண்டாண்டு காலமாக நாங்கள் போற்றிப் பூஜித்துவரும் இந்தச் சிலையை மட்டும் விட்டு விடுங்கள்," என்று மன்றாடினர்.

சோமநாதபுரத்துச்சிலை இந்த பக்த கோடிகளைக் காப்பாற்றுவதுபோய், சிலையைக் காப்பாற்ற வேண்டிய அவல நிலைக்கு பக்த கோடிகள் வந்து விட்டதை எண்ணி தனக்குள்ளாகவே நகைத்துக் கொண்டான் கஜினி. "சிலையை விட்டு விடுவதா? வேடிக்கையான கோரிக்கை! பல ஆண்டுகளாக கஜினியிலிருந்தபடியே நான் கண்ட கனவுகளை, அவை நிறைவேறுகின்ற சமயத்தில் கலைத்துக் கொள்ள நான் முட்டாளல்ல; பொன்னும் பொருளும் லட்சியமாக இருந்திருந்தால், சோமநாதபுரத்துக்கு வெளியே படைகளோடு பாசறை அமைத்துப் பல மாதங்களாக சொல்லமுடியாத தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் நாங்கள் ஆளாகியிருக்க வேண்டியதே இல்லை. ஆலயங்கள் என் லட்சியமாக இருந்திருக்காது— அரசர்களின் கஜானாவும், அழகுப் பேடுகள் வளர்க்கப்படும் அந்தப் புரங்களும் என் லட்சியமாக இருந்திருக்கும்! காவலர்களிடம் கிப்பம் வாங்குவதோடு திருப்தியடைந்திருப்பேன்... நீங்கள் அளிப்பதாகக் கூறும் செல்வத்திற்கு ஆசைப்பட்டு இந்தச் சிலையை விட்டு விடுவேனேயானால், காசுக்காக சிலையை விற்றவன் கஜினி முகம்மது என்று உலகம் பழிச்சொல் பேசும்! நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்—கஜினி முகம்மது சிலையை விற்பவனல்ல; சிலையை உடைப்பவன்!" என்று கொள்கை விளக்கம் கொடுத்தான் கஜினி.

பக்தகோடிகள் ஆண்டவனுக்கு நேரவிருக்கும் பயங்கரத்தை எண்ணிப் பதைபதைத்தனர். அவர்களுக்காவது சில மாதங்கள்வரை சோமேசரைக் காப்பாற்றும் ஆற்றல் இருந்தது. ஆனால் சோமநாதருக்கோ...அவர் செயலற்றுச் சிலையாகிவிட்டார்!

"நடக்கட்டும் வேலை! போர் வீரர்களே, அல்லாவின் புகழ் விளங்க, ஆரம்பமாகட்டும் உங்கள் வேலை!" என்றான் கஜினி.

"ஹரே சங்கர்! ஜெய் சங்கர்!" முழங்கிய ஆலயத்தில் "அல்லாகு அக்பர்!" எதிரொலித்தது!

"கல், கல்" என்ற ஒலி! சோமநாதபுரத்துச் சிலை சிதையத் தொடங்கியது! இஸ்லாமிய வீரர்கள் பலம் கொண்ட மட்டும் சிலையைத் தாக்கினார்கள். தீப்பொறி பறக்கச் சிதைந்து விழும் கற்பொடியைப் பார்த்துப் பரவசமடைந்து நின்று கொண்டிருந்தான் கஜினி!

ஆணவம் அடிபணிந்தது!

'நான் பெரியாரவர்களுடன் 15—20 ஆண்டுகள் இருந்து பாடுபட்டேன். நான் அவரை கார்ல் மார்க்ஸ் என்றேன்; லெனினுடன் ஒப்பிட்டுக் காட்டினேன்; சாக்ரடீசைப் போன்றவர் என்று உவமை காட்டி விளக்கினேன். நான் சொன்ன அதைத்தானே இன்று மிச்சமிருக்கும் தோழர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? அரைத்த மாவையேதானே இன்றைக்கு அரைத்துக் கொண்டிருக்கிறார்கள்? பெரியாருடனிருந்து நான் செய்த 15 ஆண்டு தொண்டுகளைவிட சுப்பிரமணியத்தை வாயால் அடி பணிந்து பேசச் செய்ததுதான் நான் பெரியாருக்குச் செய்த மிக முக்கிய தொண்டு என்று கருதுகிறேன்.

"பதினைந்து பேர்தான் சென்றார்கள், பரிதாபத்துக்குரியவர்கள் — என்று பழித்துப் பேசினார்கள்; அவர்களுடைய பகையையும் தாங்கிக் கொண்டுதான் பஞ்சை, பராரிகளைப்போல நாங்கள் 15 பேர் சென்றோம், சட்ட சபைக்கு!

"எந்தப் பெரியாரை மன அரிப்புடன், 'பைத்தியம்' என்று சொன்னாரோ, பிறகு அதே பெரியாரை—அந்த ஆணவம் அடங்கி, 'அடி பணிகிறேன்' என்று எங்கள் எதிரிலேயே—எங்கள் பேச்சுக்குப் பிறகு சொன்னார். இதுதான் பெரியாருக்கு எங்களுடைய காணிக்கை! சிலர், பெரியாரவர்களுக்குத் தீப்பெட்டியும் பெட்ரோலும் காணிக்கையாகக் கொடுத்தார்களாம்!

"இட்டார்க்கு இட்டபலன் — என்பதுபோல, தகுதிக்குத் தக்கபடியே பலன் கிடைக்கும். நல்ல மனம் படைத்த நாம், காங்கிரஸ் என்னும் தராசில் தங்கத்தை வைத்து நிறுத்து காணிக்கையாகத் தருகிறோம்.

—அறிஞர் அண்ணா



பட உலகில் புதிய திருப்பம்!

'குலதெய்வம்' 'முதலாளி' வெற்றிகளுக்குப் பிறகு; குறைந்த செலவில், குறைந்த காலத்தில், நீண்ட நாள் ஓடக்கூடிய படத்தைத் தயாரிக்கும் புதிய திருப்பம் துவங்கியிருக்கிறது.

அதோடு இந்த திங்கள் புதிய தயாரிப்பாளர்களின் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கிறது.

'பிலிம்' கட்டுப்பாடுபற்றிய பேச்சு வார்த்தைகள் துவங்கியதிலிருந்து இதுவரை தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 75-க்கு மேற்பட்ட படக் கம்பெனிகள் தோன்றியிருக்கின்றன.

இதுவரை அமெரிக்காவிற்கு அடுத்தபடி அதிகமான படங்களைத் தயாரிக்கும் இடத்தை இந்தியா பெற்றிருந்தது. இனி மேல் அந்த இடம் மாறி; அமெரிக்காவின் இடத்தை இந்தியா பெற்றுக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புதுத் தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை உயர்வு புதுமுகங்கள் அறிமுகத்தை அதிகப்படுத்தியிருப்பது தமிழ்ப் பட உலகம் வரவேற்க வேண்டிய செய்தியாகும்.

ஓய்வு ஒழிவின்றி—இரவு பகலென்று பராது உழைத்துவந்த முதல்தர நடிகர்களும் இதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்களாம்.

○○○

தமிழ்ப் படம் இந்தியில்!

தமிழில் அமோக வெற்றியடைந்த 'குலதெய்வ'த்தின் இந்திப் படத்திற்கு 'பாபி' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள், ஏ.வி.எம். ஸ்டுடியோவினர்! 'பாபி' என்றால் 'அண்ணி' என்று பொருள்!

கிருஷ்ணன் பஞ்சு டைரக்ட் செய்யும் இந்தப் படம் டிசம்பர் இறுதியில் உபகண்டமெங்கும் திரையிடப்பட இருக்கிறது.

தமிழில் கட்டபொம்மன் கூத்திற்குப் பதில் 'லைலா மஜ்னு' நகைச்சுவைக் கூத்தாக்கப்பட்டிருக்கிறது. சந்திரபாபு தோன்றிய பாகத்தில் 'ஆகா' தோன்றுகிறார்.

பால்ராஜ் சகானி, துர்க்கா கோட்டே, பேபி நந்தா, பண்டரி பாய் — ஆகியோர் படத்தின் பிரதான பாகங்களில் நடித்து வருகிறார்கள்.

இந்திப் படம் தமிழில்!

'பாக்தாத் திருடனை'த் தயாரித்துவரும் 'சதர்ன் மூவிசார்' இடையிலே தங்கள் இரண்டாவது படத்தையும் துவங்க இருக்கிறார்கள். இதற்கென இந்தியில் வெற்றிப்படமான 'மிஸ்டர் எக்ஸ்' படக்கதையின் உரிமைகளைப் பெற்றிருக்கின்றனர்.

இந்தப் படத்தில் அசோக் குமார் நடித்த பாகத்தில் நண்பர் ஸ்ரீராமும், பிரான் நடித்த பாகத்தில் நண்பர் அசோகனும் நடிப்பார்கள் என்று தெரிய வருகிறது.

கதாநாயகியாக புதுமுகம் ஒன்றும் இந்தப் படத்தில் அறிமுகப் படுத்தப்படும் என்றும் தெரிய வருகிறது.

குறுகிய காலத்தில்—குறைந்த செலவில்' படம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற திரையுலகப் புது முயற்சியில் ஒன்றாக இருக்குமாம், இது!

○○○

கமால் பிரதர்சின் 'சேவா சதனம்'!

'புதையல்' படமெடுத்த கமால் பிரதர்ஸ் கம்பெனியார் தங்களது இரண்டாவது தயாரிப்பாக, முன்பு தமிழில் வெற்றிப் படமாகப் பெயர் பெற்ற 'சேவாசதனத்'தைத் தயாரிக்கவிருக்கின்றனர்.

முன்னர் 'கோகிலவாணி' எம். எஸ். சுப்புலட்சுமி நடித்த கதாநாயகி பாத்திரத்தில் இப்போது 'உலக நாட்டியப் பேரொளி' பத்மினி நடிக்கிறார்.

முன்பு எப். ஜி. நடேச அய்யர் நடித்த பாகத்தில் நாகையா தோன்றுவார்.

பூர்வாங்க வேலைகள் முடிந்தும் படம் விரைவில் 'செட்'டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

○○○

மாடர்ன் தியேட்டர்சின் படங்கள்!

'ஆரவல்லி'யைத் தயாரித்த மாடர்ன் தியேட்டர்சாரின் அடுத்த தயாரிப்பு நண்பர் ஆசைத்தம்பியின் அழகு வசனத்தோடு 'பெற்ற மகனை விற்ற அன்னை' என்ற பெயரில் வளர்ந்து வருகிறது.

இதில் இலட்சிய நடிகர் ராஜேந்திரன், மனோகர், மற்றும் பண்டரிபாய் முதலியோர் நடிக்கின்றனர். இதை டைரக்ட் செய்பவர் மித்ரதாஸ்.

சமூகப்படமாக இது வளர்ந்து வரும்போதே, வேறொரு பக்கத்தில் 'தலை கொடுத்தான் தம்பி'க்கான பூர்வாங்க வேலைகள் துவங்கப் பெற்று விட்டன. மாறன் எழுதும் இந்தக் கதைக்கான நட்சத்திர தேர்தல் இப்போது நடைபெற்று வருகிறது.

டி. ஆர். சுந்தரம் இந்தப் படத்தை டைரக்ட் செய்ய இருக்கிறார்.

'கத்தரிக்காய் குண்டு'!



மரக்கறி உணவு உண்போர் மாநாட்டில் பேசிய ராஜேந்திரர் யாராவது ஹைடிரஜன் குண்டிலிருந்து தப்பிக்க விரும்பினாலும் அவர்கள் சைவத்திலிருந்து தப்பிக்க முடியாது என்று கூறியதைத்தான் 'சங்கர்ஸ் வீக்லி' யின் இந்தக் கேலிச் சித்திரம் விளக்குகிறது.



குறள் கொடுத்த குரல்

எழுதியவர்: டி. கே. சீனிவாசன்

வெற்றி யாருக்கு?, இலக்கியத்தில் காதல், நினைவும் நிகழ்ச்சியும், அந்தச் சிரிப்பு, குறள் கொடுத்த குரல், கிழக்கு வெளுத்தது—என்ற ஆறு சிறுகதைகள் அடங்கியது இந்நூல். மற்ற சிறுகதைகளுக்கும் நண்பர் டி. கே. சீ. அவர்களின் சிறுகதைகளுக்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு. ஆழ்ந்து படிப்போர்க்குச் சிந்தனைக்கு விருந்தாகத் தெவிட்டாத தனி முறையில் புதுப்புது உவமைகள் வாயிலாகப், பகுத்தறிவு மணம் பரப்பும் சீர்திருத்த இயக்கக் கொள்கைகளை, நூதனமான கோணத்தில் நின்று ஆராய்ந்து, அலசி, விளக்கிக் காட்டுவதே இவரது குறிக்கோளாகும். இலட்சிய முழக்கம் செய்யும் இவருடைய சிறுகதைகளின் தொகுப்புகள் நாட்டவருக்குப் பயன்படுமாறு இன்னும் ஏராளம் வரவேண்டும். அதற்கு வழிகாட்டும் வகையில் வெளிவந்துள்ள இத்தொகுப்பின் விலை ரூபாய் ஒன்றுதான்.

கிடைக்குமிடம்:

சாந்தி நூலகம்,
2-122, பிராட்வே, சென்னை—1

வெட்கம்

மொழிபெயர்ப்பு: நாக முத்தையா

எமிலிஜோலாவின் 'ஷேம்' என்ற நாவலின் மொழிபெயர்ப்பு இது. ஆனால் இதைத் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ப மாற்றியிருப்பதாகக் கூறுகிறார்கள். அதனை ஒத்துக் கொள்ள இயலாதவாறு கதைப்போக்கு இருக்கிறது. தமிழ் மட்டும் கற்றவர்களுக்கு வசதியாகப் பிறநாட்டு அறிஞரின் நூல்களை அப்படியே மொழி பெயர்ப்பதுதான் நல்லதே தவிர, மாற்றி எழுதுவதால், இரண்டுங் கெட்டான் நிலையில் புதியதொரு இலக்கியம் ஏற்படும் முறை விரும்பத்தக்கதன்று.

தவறு செய்பவர்களிடத்தும் இரக்க உணர்ச்சியைத் தூண்டும் வண்ணம் கதாபாத்திரங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. நடை சரளமாகவும் எளிமையாகவும் உள்ளது. அந்த அளவில் ஆசிரியருக்கு வெற்றிதான்.

விலை ரூ. 1—50

கிடைக்குமிடம்:

பிரேமா பிரசுரம், சென்னை—24

வீரவாலி

நாடகாசிரியர்: ப. கண்ணன்

பகுத்தறிவு இயக்கத்தின் பழம்பெரும் எழுத்தாளர்களில் ஒருவரான நண்பர் ஜலகண்டபுரம் ப. கண்ணன் அவர்கள் தீட்டிய அருமையான நாடகம் இது. வால்மீகி இராமாயணத்தையும், எண்ணற்ற வரலாற்று ஆராய்ச்சி மேதைகளின் முடிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு இராமாயணம் நடந்திருந்தால் இப்படித்தான் 'இருந்திருக்க முடியும் என்ற அசைக்க முடியாத துணிவோடு மறுப்பதற்கே வழியில்லாமல் சம்பவங்களைக் கோத்து சிறப்பான ஒரு நாடகத்தை ஆக்கித் தந்துள்ளார். தமிழினத்தின் எழுச்சிக்குத் தக்க துணைசெய்யும் இந்நாடகம். நாடக, சினிமாத் துறைகளில் அநுபவமிக்க நண்பரின் நாடகத்தைப்பற்றி மேலும் கூறத் தேவையில்லை. இது பன்முறை நடிக்கப்பட்டு, நன்முறையில் பாராட்டும் பெற்றுள்ளது.

விலை ரூ. 1—25

கிடைக்குமிடம்:

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
ஜலகண்டபுரம்

கிளி பறந்தது

எழுதியவர்: நாக முத்தையா

பல்வேறுபட்ட குணநலன்களைக் கொண்ட ஏராளமான பாத்திரங்கள், அடுத்தடுத்துத் தொடர்ந்துவரும் சம்பவங்களின் சேர்க்கைகள் நிறைந்து, உணர்ச்சியைத் தூண்டிவிடும் போக்கில் அமைந்துள்ளது இந்த நாவல். கதையின் ஓட்டத்தைத் தடை செய்து ஆங்காங்கே நிறுத்திவிடும் அளவுக்கு உவமைகளை இடையிடையே அள்ளிச் சொரிந்து ஆசிரியர் ஒரு புது வழி காண முயன்றிருக்கிறார். நல்ல உவமைகள் சில இருந்தும் எண்ணிக்கை மிகுதியால் அவற்றை ரசிக்க முடியவில்லை. இக் குறையைத் தவிர, உள்ளத்தைத் தொடும் வகையில் நன்றாகத் தீட்டியுள்ளார்.

நூலும் சிறிய அளவில், அழகாக இருக்கிறது.

விலை ரூ. 1—00

கிடைக்குமிடம்:

பாரி நிலையம், சென்னை—1

பிறைவானம்....

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

டிருந்த 'கவணை' வழக்கம்போல் தேடி எடுத்தன. பையில் முன்பே பொறுக்கி சேமித்து வைத்திருந்த கூரிய கற்களில் ஒன்றை எடுத்தான். கவணில் பொருத்தினான். குறி வைத்தான். பலம் கொண்ட மட்டும் இழுத்துச் செலுத்தினான். கல் காற்றைவிட வேகமாகப் பறந்தது.

ஆனால்...எப்போதும் எல்லோரும் நினைப்பதெல்லாமா நடந்து விடுகின்றன? அப்படி நடந்து விட்டால் உலகில் தொல்லைகள் ஏது? துன்பங்கள்தான் ஏது? யாரும் அனுபவித்தறியாத—ஆனால் கற்பனையில் காட்டப்படுகின்ற 'மந்திர சக்தி'யும் பலித்து விடும்—மாயங்களும் நிகழ்ந்து விடுமே!

அதைப்போலத்தான் ஜிகோ ஒன்று நினைத்தான்; நடந்தது வேறு ஒன்றாகிவிட்டது. குறி தவறிவிட்டதோ—என்கிறீர்களா? இல்லை; இல்லை! பல ஆண்டுகள் பழக்கமாயிற்றே; குறி தப்புமா? தப்பவில்லை; ஆனால் அவன் குறிவைத்த உருவம்தான் இந்த முறையும் தப்பி விட்டது!

காரோட்டியைக் குறி வைத்தான் ஜிகோ. நின்று கொண்டிருந்தவர்கள் அப்படியே அசையாமல் நின்று தொலைத்திருக்கக் கூடாதா? அல்லது அந்தப் பொல்லாத கல்லுக்குத்தான் ஜிகோவின் கோபம் புரிந்திருக்கக் கூடாதா? நின்றவர்கள் அசைந்தார்கள்; நகர்ந்தார்கள். காரோட்டி இடம் மாறினான்; அதனால் தப்பி விட்டான். ஆனால் அந்த இடத்திற்கு வந்த வேறொரு உருவத்தின் மண்டையில் 'சதக்'கென்று தாக்கியது அந்தக் கூரிய கல்!

என்ன ஆச்சரியம்! முன்பு காரிலே கல்லடிபட்டு, கட்டுப் போட்டிருந்த அதே மனிதரைத் தான்—அதே இடத்தில்தான் மீண்டும் தாக்கி விட்டது அந்தக் கல்!

அந்தப் பெரியவர் "ஐயோ" என்று அலறினார். மறுகணம் அவரது கரங்கள் அவரது தலையைப் பிடித்துக் கொண்டன. 'தடால்' என்று கீழே சாய்ந்தார் அவர்!

ஜிகோ என்ன செய்வது என்று புரியாமல் கண நேரம் அப்படியே இருந்துவிட்டான். பின் என்ன நினைத்தானோ என்னவோ மரத்தைவிட்டு வேகமாகக் கீழே இறங்கினான்.

●

வலிக் கொடுமையால் படுக்கையில் புரண்டு புரண்டு உருண்டுகொண்டிருந்தார் மருத்துவ மனைக் கட்டிலிலே படுத்திருந்த அந்தப் பெரிய மனிதர். அவருக்குப் பக்கத்தில் ஒரு சிறு கூட்டமே இருந்தது. பணக்காரரல்லவா; யார் யாரோ நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் எல்லோருக்கும் பின்னால் ஜிகோ நின்றுகொண்டிருந்தான்!

அவன் எங்கே அங்கு வந்தான்?

அடிபட்டவர் அழுதால் என்ன; அலறித்துடித்தால் தான் என்ன; தன் வேலை முடிந்தது என்று ஓடித் தப்பும் அவன் இப்போது அங்கு ஏன் வந்தான்?

அவனது கலங்கிய முகமும் கவலையால் தடுமாறிக்கொண்டிருந்த அகமும் இதற்குப் பதில் சொல்லுகின்றன—அவன் தான் செய்தது மாபெரும் தவறு என்று இப்போது நினைத்தான்!

அவனது கரங்கள் ஒன்றோடு ஒன்று பிசைந்துகொண்டிருந்தன. கால்கள் இங்குமங்கும் நடை போட்டுக்கொண்டிருந்தன. காதுகள் இரண்டும் அந்த மனிதரின் வாய் என்ன முணு முணுக்கிறது என்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தன. ஆனால் உள்ளமோ...'ஓடடா முட்டாளே! ஓடிப்போய் அவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேள்!" என்று அறிவுரை பகன்றது!

ஜிகோ மனச்சாட்சி தந்த அந்தச் சவுக்கடியைத் தாங்கமாட்டாதவனாய் கூட்டத்தில் புகுந்து ஓடினான். படுக்கையை அடைந்தான். அந்த மனிதரின் கால்களைப் 'கப்'பென்று பிடித்துக் கொண்டான்!

"அனாதையே! அணுகுண்டு விட்டுவைத்த அபாயச் சின்னமே! இங்கு எங்கே வந்தாய், மறுபடியும்?"

—காரோட்டியின் கர்ண கடூரமான குரல்தான் மறுபடியும் எழும்பியது!

"அப்படித் திட்டாதேயப்பா! நான்கூட அணுகுண்டால்—அதன் கொடுமையால் 'அனாதை'யானவன்தானப்பா! என் அருமந்த மகனை விட்டு, நான் யாரு மற்றவனாக ஆனதும் அந்த அணுகுண்டினால் தானப்பா! மகனே! உன்னைப் பிரிந்து நான் அனாதையினும் கேவலமாய் வாழ்வது சகிக்க முடியவில்லை... என்னையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு விடமாட்டாயா?" —இப்படி முணுமுணுத்தார் அந்தப் பெரியவர்!

ஆனால் அதைத் தொடர்ந்து அவர் உதடுகள் வெளியிட்ட சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த ஜிகோ திடுக்கிட்டு விட்டான்! ஆமாம்; அவர் "ஜிகோ! கண்ணே ஜிகோ!"..என்றுதான் முணுமுணுத்தார்!

ஜிகோவிற்கு எதுவுமே புரியவில்லை. வெறி பிடித்தவனைப் போல் எழுந்தான். அந்த மனிதரின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான் ஒரு கணம்!

மறுகணம், அந்த மருத்துவ மனையே கிடுகிடுக்கும் வண்ணம்—அங்கே கூடியிருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியத்தால் சிலையாகும் வண்ணம ஜிகோவின் அலறல் எழுந்தது "ஜியோ...அப்பா!" என்று!

அந்த மனிதர் படுக்கையை விட்டு குதித்து எழுந்தார். அவரது கணகள் விரிந்தன! ஜிகோவின் கண்களோடு மோதின! பொருள் பொதியப் பார்த்தன! என்னவோ பேசின! ஐந்தாண்டுகால பிரிவுதான்-ஆனால் அடையாளங் கண்டு கொண்டு விட்டன!

அதன் பிறகு கண்கள் சக்தியிழந்தன—ஆமாம்; கண்ணீர் திரை போட்டுவிட்டது! வெகு நேரம் வரை மருத்துவ மனையிலே அந்தத் தந்தையும் மகனும் எழுப்பிய ஆனந்த—அழுகுரல் கேட்டுக் கொண்டிருந்தது!

அந்த "அனாதைகள்" ஒன்று சேர்ந்துவிட்டன — ஜிகோவின் இடையிலிருந்து விடை பெற்றுக் கொண்டு ஓடிவிட்டது கண்டோரைக் கலங்க வைத்துக் கொண்டிருந்த அந்தக் கவண்!

[1948-ல் வெளிவந்த ஜப்பானியக் கதை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது.]

—சொர்ணம்

★ அனாதை ★

அவனை உங்களுக்குத் தெரியுமா? அவன் அப்படி ஒன்றும் சீமான் பெற்றெடுத்த செல்வனல்ல; அரசியல் தலைவரின் அருமந்த புத்திரனல்ல—எல்லோருக்கும் தெரிந்திருக்க! ஆனாலும் அவனை எல்லோரும் அறிந்திருக்கவேண்டுமே!

'ஜிகோ' என்று அவன் பெயரைச் சொன்னால் யாருக்கும் தெரியாது. ஏனெனில் அவனுக்கு பலர் பல பெயர்களைச் சூட்டி யிருந்தனர், விருப்பம் போல்!

"துஷ்டன்!" என்று சொல்லி விட்டு ஓடிவிடுவர் சிலர்.

"குறும்புக்காரனே!" என்று வாய் தவறிச் சொல்லிவிட்டு வந்த வழி தேடுபவர் சிலர்!

"நல்ல தம்பியே, ஏன் இப்படி விளையாட்டுத்தனமாக இருக்கிறாய்?" என்று செல்லமாகக் கடிவர் சிலர்—அவனிடமிருந்து தப்புவதற்கு இது நல்ல வழி தானே!

ஆனால் அவனது கோபத்தைக் கிளறும் வண்ணம் ஒரு எழுத்து சொல்லியிருந்தாலும் அவனிடமிருந்து தப்ப முடியாது. அதாவது அவன் கையிலிருக்குமே 'கவண்'-அதிலிருந்து குறி தவறாது 'ஜிவ்'வென்று பறந்துவருமே கல்—அதனிடமிருந்து தப்புவதென்பது குதிரைக் கொம்பு!

ஆனால் அன்று......

"பாதையின் குறுக்கே என்னடா வேலை? நகரடா, அனாதையே..."—காரோட்டி வந்த ஒருவன் இந்தக் சுடுமொழிகளை உதிர்த்தான்.

"அனாதை!"-ஆயிரம் சம்மட்டிகள் தன் தலையிலே ஏக காலத்தில் அடித்துவிட்டதாக உணர்ந்தான் ஜிகோ! நேற்றுவரை அவன் செவிகளில் விழாத புதிய பெயர்! 'குரங்கு—குறும்பன்; உதவாக்கரை-ஊர் சுற்றி; துஷ்டன்—துடுக்குக்காரன்'— இப்படித்தான் அவன் பட்டங்கள் பெற்று இருக்கிறான். ஆனால் இன்று...அவன் அனாதை-தாய் தந்தையற்ற அனாதை—இந்த அபாயகரமான பட்டத்தையுமல்லவா ஒரு கொடியவன் சூட்டிவிட்டான்!

ஜிகோவின் கண்களில் கோபம் தோன்றியது. நடுத்தெருவை விட்டு நகரவில்லை அவன்! "நகரடா நாடோடி! திமிரைப் பார் திமிரை, அனாதைக் கழுதைக்கு!..."-காரோட்டிக்கு யார் மேல் கோபமோ தெரியவில்லை; மீண்டும் கத்தினான்.

ஆனால் அவன் சொல்லுகின்ற ஒவ்வொரு எழுத்தும், 'ஜிகோ'வின் 'கோபாமீட்ட'ரை உயர்ந்த அளவுக்கு விரட்டிக் கொண்டிருந்தது என்பதை அவன் என்னவோ உணரவில்லை.

ஜிகோவின் முகம் இரத்தச் சிவப்பாகியது. மெதுவாக அந்தக் காரோட்டியை நோக்கி நடந்தான். ஆனால் அவனோ, நின்றிருந்த காரை அவசரமாக எடுத்தான். "ஊரையே அழித்த அணுகுண்டு உன்னை மட்டும் ஏன்தான் விட்டு வைத்ததோ? குடும்பமே குலைந்தபோது—நீ மட்டும் ஏன்டா பிழைத்துத் தொலைந்தாய்?" என்று மீண்டும் திட்டிக் கொண்டே யிருந்தான், அவன்.

கார் புறப்பட்டுவிட்டது, ஆனால், ஜிகோவின் கோபம் அடங்கவில்லை. அவசர அவசரமாக இடுப்பிலிருந்த 'கவணை' எடுத்தான். கூரிய கல் ஒன்றைப் பொறுத்தினான். காரை நோக்கி முழு பலத்தோடு இழுத்து விட்டான். காரைவிட வேகமாக கல் பறந்தது. காரின் பின்புறக் கண்ணாடிக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தது. மறுகணம் காருக்குள்ளிருந்து "ஐயோ" என்ற அவல ஓலம் எழும்பியது.

கார் 'சடக்'கென்று நின்றது; காரோட்டி தப்பித்துக் கொண்டான்; ஆனால் ஜிகோவின் கவண் கல்லுக்கு இலக்கானார் காருக்குள் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒருவர்! ஆனால் ஜிகோ எதிர்திசையிலே குறுக்கு வழி பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தான்!

★

வழக்கமாக அவனுக்கு சிரிப்பையும் களிப்பையும் தரும் அந்தத் தோட்டம் இப்போது துன்பக் காடாகத் தோன்றியது. பசிபோக்கும் பழவகைகள் இன்று விஷமாகக் கசந்தது!

ஏன்? அவன் நெஞ்சிலே இன்று புகுந்துவிட்ட குழப்பம் அவனை ஆட்டிப் படைத்தது!

நேற்றுவரை அவன் இத்தகைய துன்பத்தை அனுபவித்ததில்லையே! அவன் விருப்பம்போல் அவனது வாழ்க்கை வண்டி ஓடிக்கொண்டிருந்தது. தன்னிச்சையாய் — கவணும் கையுமாய்—கண்டோர் அவன் கல்லுக்குப் பயப்படும் துஷ்டனாய்-வளர்ந்து, வாழ்ந்து வருகிறான், நினைவு தெரிந்த நாள் முதல்! அவனைத் தடுப்பார் யார்? அடிப்பார் யார்?...அவன் தான் அனாதையாயிற்றே!

அனாதையாம்—அவன் மறந்திருந்த உண்மையை நினைவு படுத்திவிட்டான், கொடியவன்! தாயன்பு; தந்தையின் பாசம்—இவைகளை அவன் அனுபவித்ததில்லை-அவனுக்குக் கிடைக்காத அந்த அன்பணைப்பை நினைத்து அவன் எப்போதோ எண்ணியதுண்டு; ஏங்கியதுண்டு! ஆனால் இப்போது...அவள் உள்ளமெல்லாம் நிறைந்து-உடலெல்லாம் பரவி-அவனை வேதனை உலகத்திற்கு இழுத்துக்கொண்டு ஓடியது அந்த ஆசை!

அணுகுண்டு வீசிய கொடியவர்களுக்கு இன்னும் ஒன்று கிடைக்காமலா போய்விட்டது? நான் இருந்த திசையிலும் ஒன்றை வீசியிருக்கக் கூடாதா? என்னைத் தேடிப் பிடித்தாவது என் தலையிலே போட்டிருக்கக் கூடாதா? குண்டுக்குப்பலியான என் குடும்பத்தோடு நானும் மறைந்தொழிந்திருப்பேனே! கருணையே உருவான அப்பா—அன்பு வடிவான அம்மா-இவர்களைக் காவுகொண்ட அந்த விஷக் குண்டு என்னை மட்டும் ஏன் விட்டு வைத்தது? விழிகள் குளமாக —வேதனையின் உருவாக—வெந்து வெந்துச் செத்துக்கொண்டிருக்கத்தானா?... ஐயோ, அம்மா!...அப்பா!... இன்றுவரை நான் அனாதையாக வாழ்ந்தது போதுமம்மா! எப்படியாவது என்னையும் உங்களிடம் அழைத்துக்கொண்டு விடுங்களம்மா! என்னால் இந்தக் கொடுமையை இனிமேல் தாங்க முடியாதம்மா!

—வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது ஜிகோவிற்கு! இருக்காதா? அவன் குறும்பன் என்றாலும் அவனுக்கும் இதயம் இருக்கிறதே! அது விலைக்குக் கிடைக்காத-விலை மதிப்பிடமுடியாத அந்த அன்புக்காக ஏங்குவதில் வியப்பொன்றுமில்லையே!

புதுமைகள் பூத்துக் குலுங்கி வரும் ஜப்பான் தேசத்திலே அவன் எத்தனையோ கண்கொள்ளாக் காட்சிகளைக் காண்கிறான்! விவசாய வளம் பெருகிய வயல் வெளிகள்—குண்டால் குலைந்து போன இடங்களிலே வான் முட்டும் மாளிகைகள்—எரிமலையின் தீக்குழம்புக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு—அழிந்து பின் எழும்பும் அழகு நகரங்கள்—'ஏ, பரந்த உலகமே! உனக்கு எது வேண்டுமானாலும் என்னைக் கேள்; நான் தருகிறேன் அட்டியின்றி!' என்று உலகை நோக்கி சவால் விடும், குறுகிய காலத்தில் வியக்கத் தக்க அளவு வளர்ந்துவிட்ட தொழில் வளர்ச்சி—விஞ்ஞான முதிர்ச்சி! இவை ஒன்றும் ஜிகோவின் கருத்தைக் கவர்ந்ததில்லை! ஆனால்.....தத்தித் தடுமாறி நடந்துகொண்டிருக்கும் குழந்தைகள்—அவர்களது கரங்களைப் பிடித்திருக்கும் பெற்றவர்களின் கரங்கள்—அந்தப் பாசப் பிணைப்பிலே பொதிந்து கிடக்கும் பேரின்பம்-இதுதான் அவனது கண்ணையும் கருத்தையும் கவர்ந்த ஒன்று! எங்கே அவன் இந்த அன்பு ததும்பும் அழகுக் காட்சியைக் கண்டாலும் நிலைகுத்தி நின்றுவிடுவான்; சிலையாக மாறிவிடுவான்—ஆனால் சிலைக்கும் அவனுக்கும் ஒரே ஒரு மாற்றம் மட்டுமே அப்போது நிகழும்! சிலையின் கண்கள் ஒருகாலும் கண்ணீர் விடாது; ஆனால் ஜிகோ அழுவான்; அழுதுகொண்டே யிருப்பான்!

அந்த ஜிகோதான் இப்போதும் அழுதுகொண்டிருக்கிறான். அனாதையானேனே; ஆதரவற்றவனானேனே—என்று எண்ணி ஏங்கிக்கொண்டிருக்கிறான்.

அப்போது......

அந்தத் தோட்டத்துப் பக்கம் கார் வரும் ஓசை ஒன்று எழும்பியது. ஜிகோ திடுக்கிட்டு எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான். எதுவும் கண்களுக்குத் தென்படவில்லை. மரங்கள் அடர்த்தியாக இருந்தன. என்ன செய்வது என்று யோசித்தான். 'விறுவிறு' என்று மரம் ஒன்றில் ஏறி கவனித்தான்.

கார்வந்து நின்றது—காரைக் கவனித்ததும் அவன் திடுக்கிட்டு விட்டான். அதே கார்தான்—அவனது கவண் கல்லுக்குப் பலியான அதே கார்தான்!

அதிலிருந்து இறங்கியவர்கள் அந்தத் தோட்டத்தைச் சுற்று முற்றும் பார்த்தார்கள்.

"இந்த இடம் போதுமென்றே நினைக்கிறேன் — நம்முடைய 'பேப்பர் மில்' முதலில் இதில் துவங்கினால் பிறகு பெரிய இடமாகப் பார்த்துக் கொள்ளலாம்..." என்றார் ஒருவர்!

"பேப்பருக்குத் தேவையான காட்டு மரங்கள்கூட இங்கு இருக்கின்றன!..." என்றார் மற்றொருவர்!

ஜிகோ அவர்களை கவனித்தான். அவர்களில் ஒருவரது தலையில் சிறிய கட்டு ஒன்று போட்டிருந்தது. அவர்தான் அவனது கல்லுக்கு இலக்கானவரோ! அவர் மிகவும் பெரிய மனிதரைப்போல் தோன்றுகிறாரே! அந்தத் தோட்டத்தில் பெரிய 'பேப்பர் மில்' ஆரம்பிப்பதைப்பற்றி யல்லவா அவர் பேசிக்கொண்டிருக்கிறார்! அப்படியானால் அவர் பெரிய பணக்காரராகத்தான் இருக்க வேண்டும்!

ஜிகோ இன்னும் கூர்ந்து கவனித்தான். அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த காரோட்டியை அவனது கண்கள் கவனித்து விட்டன.

மறுகணம் அவன் நெஞ்சிலே மீண்டும் கோபம் தலைதூக்கியது. அந்தப் பாவிதானே அவனது மனதிலே கலக்கத்தைத் தூவினான்; அனாதையே என்று இகழ்ந்து பேசினான்; பெற்றவர்களின் நினைவைக்கிளப்பிப் புலம்பவைத்தான்! ஜிகோ அவனைப் பழிவாங்குவதற்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக எண்ணினான்.

மறுகணம் அவனது கரங்கள் இடையிலே தொங்கிக்கொண்

[தொடர்ச்சி பக்கம்—10]

எழுத்தாணி

எம். ஆர். பி. கண்ணன்;
அயன்புரம்

(?) ரஷ்யா செயற்கைச் சந்திரன் பறக்க விடுவதுபற்றி பண்டித நேரு என்ன நினைக்கிறார்?

போயும் போயும் ஒரு நாயை வைத்து அனுப்புகிறார்களே; என்னைக் கேட்டிருந்தால் ஒரு யானைக் குட்டியை அனுப்பியிருப்பேனே— என்றுதான் நினைப்பார்.

அ. பாண்டியன்; ஆத்தூர்

(?) "எனது நண்பர் ஒருவர் தமிழைவிட ஆங்கிலமே சிறந்த மொழி என்கிறார்—உங்கள் கருத்து என்ன?

உங்கள் நண்பர் ஒரு ஆங்கிலேயராக இருந்தால் நிச்சயம் அவரது தாய்மொழிப் பற்றைப் பாராட்ட வேண்டியதுதான்!

ந. ஓம்பிரகாசன்; பெங்களூர்

(?) அழகு என்றால் என்ன?

சில அரசியல் கட்சிகளின் கொள்கையைப் போல் அழிந்து விடும் தன்மை கொண்டது, அது!

என். பாலகிருட்டிணன்;
மணல்மேடு

(?) 'கல்கி'யும் 'ஆனந்தவிகட'னும் குறள் விளக்கம் வெளியிடுவதன் நோக்கம் என்ன?

இதுவரை அவர்கள் வள்ளுவரின் உருவத்திற்கு நூல் போட்டு வந்தார்கள். இப்போது அவரது நூலுக்கே நூல்போடும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அவ்வளவுதான்!

வாணன்; வெப்பேரி

(?) அண்ணாதுரையின் பேச்சைக் கேட்கப் பண்பில்லாதவர்கள் தான் வருவார்களாமே?

ஆமாம்; அப்படியும் உண்டு! அண்ணாவின் பேச்சைக் கேட்பதற்குப் பண்பில்லாதவர்களும் சில நேரம் வருவார்கள். அவரது பேச்சைக் கேட்டபின் பண்புள்ளவர்களாக மாறிவிடுவார்கள். வேண்டுமானால் நீரே ஒரு முறை பரீட்சை செய்து பார்த்துக் கொள்ளுமே!

சோம. குமரேசன்; காரைக்குடி

(?) பண்டித நேரு ஏன் வாயைக் கட்டச் சொல்கிறார்?

பாவம்; அவருக்குப் பிறர் செய்ய வேண்டிய உபதேசத்தை மறந்துவிட்டு அதையே திருப்பிச் சொல்லியிருக்கிறார்; அவ்வளவுதான்!

மோகனவேல்; விழுப்புரம்

(?) மீண்டும் சென்னைக்கு ஒரு வடநாட்டுக்காரர் கவர்னராக வரப் போகிறாராமே?

பிறகென்ன; தென்னாட்டான் தேர்தலில் தோற்றாலென்ன? அந்த நாற்காலியில் உட்காரும் தகுதி அவர்களுக்குத் தானே அய்யா உண்டு!

பி. கே. டி. தங்கராசன்;
சிங்கபெருமாள்கோயில்

(?) நிதியமைச்சர் சுப்பிரமணியம் இல்லாவிட்டால் காமராசர் பாடு என்ன ஆகும்?

ஒன்றும் ஆகாது; சட்டசபையில் விதண்டாவாதங்கள் குறைவாக இருக்கும்!

பி. கே. ஆர். கோதண்டராமன்;
குலசேகரப்பட்டணம்

(?) நீர்மேல் எழுத்து என்று எதைச் சொல்வார்கள்?

உமக்குத் தெரியாதா; காமராசர் பெரியாரிடம் செய்து கொண்ட நட்புறவு அந்த எழுத்துக்களால் எழுதப்பட்டதுதான்!

தர்மதாசன்; பாகனேரி

(?) சிந்திக்கத் தெரியாதவர்கள் கற்ற கல்வி?...

சீரணிக்காத உணவு!

கணேசன்; விளநகர்

(?) பணக்காரர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? ஏழைகள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

ஏழைகள் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் பணக்காரர்களும், பணக்காரர்கள் எப்படி உழைக்கிறார்கள் என்பதை ஏழைகளும் தெரிந்து கொள்ள வேண்டும்,

எஸ். கமலா; தர்மபுரி

(?) பள்ளிக்கூடங்களில் சிறந்தது எது?

அனுபவப் பள்ளிக்கூடம்—ஆனால் அதில்கூட முட்டாள்கள் கற்றுத் தேர்வதில்லை.

மு. கருணாநிதி
சுற்றுப் பயணம்

நவம்பர்:
- 24 தஞ்சை
- 28 மாலை-கோபி (பொதுக் கூட்டம்) இரவு—புஞ்சை புளியம்பட்டி (நாடகம்)

டிசம்பர்:
- 1 வண்டிப்பெரியார் (கேரள தி. மு. க. விழா)
- 2 கம்பம் (பொதுக் கூட்டம்) தேனி (பொதுக் கூட்டம்)
- 5 சேப்பாக்கம்-சென்னை
- 8 மதுரை (சிறப்புக் கூட்டம்) மாலை—மேலூர் (பொதுக் கூட்டம்)
- 9 திருமங்கலம்
- 15 மதுராந்தகம்
- 27, 28 நாஞ்சில் மாநாடு

புதுவை தி. மு. கழக
புதிய முகவரி

திராவிட முன்னேற்றக் கழகம்
நெ. 95, துய்ப்ளேக்ஸ் தெரு,
புதுச்சேரி

முரசொலி
பொங்கல் மலர்

★

எண்ணங்களை எழுதுங்கள்!

முரசொலி பொங்கல் மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம். அதன் சிறப்புகள் என்ன;என்ன—என்ற விளக்கங்கள் தரத் தேவையில்லையென்றே கருதுகிறோம்.

"முரசொலி — பொங்கல் மலர்"—இந்தச் செய்தியே உங்களுக்கு இனிப்பூட்டக்கூடியது—மலர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணங்களை எழுதுங்கள் — இயன்ற வரை செயலாற்றி உங்கள் சிந்தை மகிழ வைக்கிறோம்—அத்துடன்,

மலர் எவ்வளவு ரூபாய் விலையில் வெளியிடலாம் என்ற கருத்தையும் உடன் எழுதுங்கள்-இது மிக முக்கியம்.

உடன் தெரிவியுங்கள்.

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்
"முரசொலி"
சென்னை—6

வேண்டுதல் ....

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

அந்நோய் தீர்வதைக் காட்டிலும் தீராது, என்னை எவ்வளவு வேண்டுமானாலும் வருத்தட்டும்!

[திரை விழுகிறது. மேடை மீது திரு 'ஆனந்தவிகடனார்' தோன்றுகிறார்.]

விகடனார்: இதுவரையில் எனது இதழில் வந்திருந்த 'குறள் கண்ட வாழ்வை'க் கண்டு களித்தீர்கள்!...

கூட்டத்தில் ஒருவர்: இதுதான் குறள் கண்ட வாழ்வா?...... ஐயோ!......அவமானம்! அவமானம்! குறளுக்கே அவமானம்!

மற்றொருவர்: ......ஆசையை அறவே ஒழிக்கச் சொல்லிவிட்டு, பெண்ணாசையால் மதி தடுமாறிய சுந்தரரின் வாழ்க்கையையா குறளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறவேண்டும்!

வேறொருவர்: குறள் கூற்றுப் படிப் பார்த்தால் தியாகராஜ சுவாமிகள் கடவுளே இல்லையே! தங்கள் எழுதியுள்ளதைப் படிக்கும் யாவரும் பரவை வீட்டுக்குச் செல்லுதல் பாபமல்ல; கடவுளே செல்கிறாரே — என்றல்லவா எண்ணுவார்கள்?

விகடனார்: அமைதி! அமைதி! நான் எடுத்துக்காட்ட வந்தது 'கலிக்காமர்' இறைவனை எதிர்த்து வென்ற கதையைத் தான்!

ஒருவர்: நீங்கள் கண்டது குறள் கண்ட வாழ்வல்ல! விகடன் கண்ட வாழ்வுதான்!

[நாடகம் குழப்பத்தில் முடிகிறது!]

—"இன்பபுரியான்"

முத்துவேல் பதிப்பகத்தின்
புதிய வெளியீடுகள்

★

மு. கருணாநிதி தீட்டிய
உதய சூரியன்
விலை ரூ. 1—50

பி. சி. கணேசன் தீட்டிய
எழுத்தாளன் காதலி
விலை ரூ. 1—25

★

[தனிப் பிரதிக்கு புத்தக விலையுடன் நான்கு அணா சேர்த்து அனுப்பவும்.]

முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை சாலை,
திருச்சி—8

அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை—6